Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Thirumurugan Com Net
திருமுருகன் கொம் நெற்
WESTERN UNION Money Transfer
FedEx Express
Inland & I.D.D Calls, Internet-Browsing & E-mail, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,
259, K.K.S.Road Jaffna. Tel - 021 222 3958 Fax - 021 222 7836
E.mail thirumurugian@lycosmail.com
46, Adiyapatham Road, thirunelvely, Jaffna. Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 தை – 12 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 14 (25.01.2005) செவ்வாய்க்கிழமை இதழ்: 117

# அரச நிவாரணக் குழுக்களில் புலிகள் இடம்பெறவேண்டும்!

## சந்தேசய கருத்துக் கணிப்பில் பெரும் ஆதரவு

(லண்டன்)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை விடுதலைப் புலிகளுடன் இணைந்தே அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசய' இணையத்தள வாசகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளில் அரசாங்கம் யாரை இணைத்து பணிகளை முன்னெடுக்கவேண்டும் என்று கேள்வி தொடுத்திருந்த சந்தேசய இணையத்தளம் - ஜே.வி.பி., விடுதலைப் புலிகள், ஐக்கிய தேசியக் கட்சி, ஏனையோர் என நான்கு தெரிவுகளைக் குறிப்பிட்டிருந்தது.

இந்த இணையத்தள கருத்துக் கணிப்பில் பெருமளவான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு வருகின்றனர். நேற்றிரவு வரை கிடைத்த வாக்குகளின் அடிப்படையில்- விடுதலைப் புலிகளை இணைத்து அரசு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பெருமளவானோர் தெரிவித்துள்ளனர்.

2153 வாக்காளர்கள் (87.4 வீதமானோர்) விடுதலைப் புலிகளை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கருத்து வெளியிட்டனர். ஜே.வி.பியை இணைக்கவேண்டுமென 195 பேரும் (7.9 வீதம்), ஐ.தே.கவை இணைக்க வேண்டுமென 81 பேரும் (3.3 வீதம்), ஏனையோரை இணைக்கவேண்டுமென 34 பேரும் (1.4 வீதம்) வாக்களித்துள்ளனர்.

## நாடு திரும்பினார் ஜான் பீற்றர்சன்

(கொழும்பு)

மூன்று நாள் விஜயமாக-இலங்கை வந்திருந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் நேற்று அதிகாலை 3.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

ஜான் பீற்றர்சன் தமது 3 நாள் விஜயத்தின்போது ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

சுனாமி உதவிப் பணிகள் குறித்த இந்தச் சந்திப்புக்களின் பின்னரே ஜான் பீற்றர்சன் நேற்று நாடுதிரும்பினார். இதேவேளை இவருடன் வந்திருந்த நோர்வேயின் விசேட ஆலோசகர் எரிக் சொல் ஹெய்ம் நேற்றுமுன்தினமே நாடுதிரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரச தரப்பு நிலைப்பாடுகளை விளக்க ஹெல்கிசன் கிளிநொச்சிக்கு விஜயம்!

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார்

(கிளிநொச்சி)

**நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விதார் ஹெல்கிசன் நேற்றுக் காலை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து - பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.**

**நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் நேற்றுக் காலை 8 மணியளவில் கிளிநொச்சிக்கு வந்தனர்.** **(12 ஆம் பக்கம் பார்க்க)**

## மூன்று வெளிநாட்டு மருத்துவர்கள் படையினரால் கடத்தப்பட்டனர்!

(திருகோணமலை)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ தொண்டர் சேவையை வழங்குவதற்கென வந்திருந்த அமெரிக்க மற்றும் செக்கோஸ்லாவிய நாட்டு மருத்துவர்கள், நேற்றுமாலை திருகோணமலையில் வைத்து இராணுவத்தினரால் பலவந்தமாக ஏற்றிச்செல்லப்பட்டனர்.

நேற்று மாலை 3 மணியளவில் திருகோணமலை தனியார் மருத்துவமனைக்கு வந்து அங்குள்ள நிர்வாகிகளுடன் கலந்துரையாடிவிட்டு வெளியே சென்றவேளை, மருத்துவ மனைக்கு முன்வைத்து அமெரிக்க நாட்டவரான ஒரு பெண் மருத்துவரும், செக்கோஸ்லாவிய நாட்டவர்களான ஒரு பெண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் மீது நேற்றிரவு சூடு!

(கொழும்பு)

கொழும்பு - வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து நேற்றிரவு தமிழ் இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் அவர் காயமடைந்தார்.

33 ஆவது லேனில் வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் காயமடைந்த ஜெகன் என்ற மேற்படி இளைஞன் களுபோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினராக இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்க தொண்டு நிறுவனங்களுக்கே ஹெலிகொப்ரர்கள் கொண்டு வரப்பட்டன!

### விசாரணையில் தகவல்

(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நிவாரணப் பணி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவெனத் தெரிவித்து இரண்டு பெல் 206 ரக ஹெலிகளை அமெரிக்காவைச் சேர்ந்த எவர்கிறின் மற்றும் றியூ மடிக்கா ஆகிய தொண்டு நிறுவனங்களே கொண்டுவந்ததென விமானப் படை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த ஹெலிகள் இரண்டும் டுபாயிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஹெலிகள் ஏன் இங்கு கொண்டுவரப்பட்டன என்பது குறித்து விமானப்படை அதிகாரிகள் குறித்த இரு நிறுவன அதிகாரிகளிடமும் விசாரணைகளை மேற்கொண்டபோது -

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான பிரதேசங்களுக்குத் தமது அதிகாரிகள் செல்வதற்காகவே இவை கொண்டுவரப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இந்தத் தொண்டு நிறுவனங்கள் இரண்டும் இந்த நாட்டின் சட்டம் ஒழுங்கை மீறி இந்தக் ஹெலிகள் இரண்டையும் கொண்டு வந்ததாகவும், எனவே இவற்றை மீளவும் டுபாய்க்கே (12 ஆம் பக்கம் பார்க்க)

### சுனாமி அனர்த்த நிவாரணம் குறித்து

## அரச உயர் அதிகாரிகளுடன் தமிழ்ச்செல்வன் ஆராய்வு!



(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பாக, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வடக்கு - கிழக்குப் பகுதி மற்றும் எட்டு மாவட்ட அரச அதிபர்கள், மற்றும் மாகாணசபை அதிகாரிகள் உட்பட 120 அரச அதிகாரிகளுடன் நேற்றுக் கலந்துரையால் ஒன்றை நடத்தினார்.

நேற்று விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்துக்களில் காயமுற்ற இருவர் நேற்று உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இடம்பெற்ற இருவேறு விபத்துச் சம்பவங்களில் காயமுற்று யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த இருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்கள்.

கற்கோவளப் பகுதியில் லொறியில் இருந்து விழுந்து காயமடைந்த இளைஞன் ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் யாழ். போதனா வைத்திய சாலையில் மரணமானார்.

உரும்பிராய்ச் சேர்ந்த அருள்பிரகாஸ் (வயது 18) என்பவரே மரண மடைந்தவராவர்.

லொறி ஒன்றில் பயணித்துகொண்டிருந்த போது விழுந்து காயமடைந்த இந்த இளைஞர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்தார்.

மரணமடைந்தவரின் சடலம் வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை மீசாலை பகுதியில் மினி பஸ் - சைக்கிள் விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமடைந்தவராவர்.

மீசாலையைச் சேர்ந்த இராசையா செல்வரத்தினம் (வயது 49) என்பவரே மரணமடைந்தவராவர். கடந்த 20 ஆம் திகதி மீசாலை சந்திக்கு அண்மையாக சைக்கிலில் வந்து கொண்டிருந்த போது - மினிபஸ் ஒன்று இவர் மீது மோதிவிட்டு தற்பிச் சென்றது. காயமடைந்த இவர் சிகிக்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமடைந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்தத்தின்போது
# பாதிக்கப்பட்ட முன்பள்ளிகளை மீள இயக்க பொது அமைப்புக்கள் உதவ முன்வரவேண்டும்
## உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் வேண்டுகோள்

சுனாமி கடல் அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட பிரதேசசங்கங்களில் அமைந்துள்ள முன்பள்ளி நிலையங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு மாதாந்த சம்பளத்தை வழங்குவதற்கு முன் வருமாறு பொது அமைப்புக்களிடம் வடமராட்சிவலய ஆரம்பப் பிள்ளை பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரைசத்திய சீலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு கோரி வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுனாமி கடல் அனர்த்தத்தினால் தொண்டமனாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதிகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் 1400 மாணவர்களும், 102 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 22 முன்பள்ளிகள் பாதிப்படைந்துள்ளன. இவற்றில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு பகுதியில் 5 முன்பள்ளிகளும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 17 முன்பள்ளிகளும் அடங்குகின்றன. இந்தப் பகுதியைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் அனர்த்தத்தினால் உயிரிழந்துள்ளனர். இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த முன்பள்ளிகளில் கல்வி கற்பித்த 32 ஆசிரியர்களும், 600 மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் சுனாமி அனர்த்தத்தினால் 9 முன்பள்ளிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த 200 மாணவர்களும், 15 ஆசிரியர்களும் பாதிப் படைந்துள்ளனர். இந்த மாணவர்களுக்கான சீருடைகள், கற்றல் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு என்பனவற்றையும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 19 முன்பள்ளிகள் முற்றாகவும், 3 முன்பள்ளிகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 19 முன்பள்ளிகளின் தளபாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 7 முன்பள்ளிகளின் விளையாட்டு உபகரணங்கள் அழிவடைந்துள்ளன. இந்த முன்பள்ளிகளில் கல்வி கற்ற 600ற்கும் மேற்பட்ட மாணவர்களும், 55 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான மாதாந்த உதவித் தொகையினை பெற்றோர் சங்கம், கடற்தொழில் சங்கங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியன வழங்கி வந்தன. தற்போதைய சூழ்நிலையில் மாணவர்களுக்கான சீருடை, சத்துணவு, கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், ஆசிரியர்களுக்கான மாதாந்த உதவு தொகை ஆகியவற்றினை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் 12 முன்பள்ளிகளில் கடற்தொழில் மற்றும் கடற்தொழிலை உபதொழிலாக மேற்கொண்டு வந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 350 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். இந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த 23 ஆசிரியர்களும், பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த முன்பள்ளிகளின் கட்டடங்களும், தளபாடங்களும் சேதமடைந்துள்ளதுடன் மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல், ஆசிரியர்களுக்கான உதவித் தொகை வழங்குதல் போன்றவற்றில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மீள இயக்குவதில் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது.

நேரடியாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை இயக்குவதற்கான ஆரம்பகட்ட நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் சேதமடைந்த முன்பள்ளிகளைத் திருத்தியமைப்பதற்கும், அவற்றுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், ஆசிரியர்களுக்கான உதவிக்கொடுப்பனவு வழங்குதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பொது அமைப்புக்கள் உதவிகளை வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (12)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தமிழ் மாணவர் ஒன்றியம் உதவி

தமிழ் மாணவர்களின் ஒருமித்த சக்தியாகத் திகழும் தமிழ் மாணவர் ஒன்றியம் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தனது அயராத சேவையினை ஆற்றிவருகின்றது.

சுனாமி கல்வி நிவாரணப்பணி மூலம் சேகரிக்கப்பட்ட கல்விசார் பொருட்கள் கட்டம்கட்டமாக அனைத்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் பகிர்ந்தளித்து வருகின்றன.

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் போன்றோர் உதவிகளைப் பெற்று வருகின்றனர். அத்துடன் இழந்த பாடக்குறிப்புகளை வழங்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றது.

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கல்வியை இழந்து வேறு நிறுவனங்களின் உதவியை பெறாத மாணவர்கள் தமிழ் மாணவர் ஒன்றியச் செயலகத்தோடு தொடர்பு கொள்ளுமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## விநாயகர் சனசமூக நிலையமும் முன்பள்ளியும் திறப்பு விழா

ஆனைக் கோட்டையைச் சேர்ந்த அமரர் கனகசபை சிவக்கொழுந்தின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட விநாயகர் சனசமுக நிலையம், மற்றும் முன்பள்ளி ஆகியவற்றின் கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

சங்கானை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தி.தட்சனாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலிதென்மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஆனைக்கோட்டை கிராம அலுவலர் வை.சந்திரராசா கௌரவ விருந்தினராகவும், கலந்து கொண்டனர்.



## சாரதிப் பயிற்சியில் ஈடுபட்ட வான் கிளிநொச்சியில் விபத்து!

(கிளிநொச்சி)

சாரதிப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த சனியன்று இடம்பெற்ற இந்த விபத்தில் சீலன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

விசுவமடுவிலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் சாரதிப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வானும் கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றுக்கு அருகில் நேரெதிரே மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தின்போது காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## கோதுமை மாவின் விலை நிர்ணயம்

(கிளிநொச்சி)

கோதுமை மாவின் ஆகக் கூடுதலான விலையினை தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி நிர்ணயம் செய்தது.

அதன்படி ஒரு கிலோ வெதுப்பக மா வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் 30 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விலையினை விடக்கூடுதலான விலைக்கு விற்பனை செய்ய வேண்டாமென வணிகர்களுக்கு விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

## பொற்பதி மக்கள் சொந்த இடங்களில்

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த பொற்பதி கிராம மக்கள் மீளவும் தமது சொந்த இடத்தில் இன்று காலை மீளக் குடியமர்த்தப்பட இருக்கின்றனர்.

கடந்த மாதம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் இடம் பெயர்ந்து குடத்தனை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

தற்பொழுது பொற்பதி பகுதியில் நிலைமை ஓரளவிற்கு சாதகமாக காணப்படுவதனால் அப்பபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த கிராம மக்களே மீளக்குடியமர்த்தப்படவிருக்கின்றனர் என சுனாமி அனர்த்த செயலணிக்குழு அறிவித்துள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் உதவி

சுனாமி கடலலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு உறவுகள், வீடுகள், சொத்துக்கள் இழந்து பாடசாலைகள், கூடாரங்கள்களில் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு, மகளிர் அபிவிருத்தி நிலையம் பல நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்திலிருந்து சமூகசேவை மகளிர் அமைச்சினூடாக வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள், தொகுதி தொகுதியாக முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

வழங்கப்பட்ட பொருட்களாவன சமையல் பாத்திரங்கள், சவர்க்காரம், தண்ணீர்போத்தல், ஆண்களுக்கான காற்சட்டை, சேட் வகைகள், நுளம்புவலை, நீர்க்குவளைகள், ஜக், கேற்றில், பாக், பயிற்சிப் புத்தகங்கள் போன்ற பொருட்களை புலோலி மெ.மி.த.க. பாடசாலை தும் பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலையம், குடத்தனை அ.த.க. பாடசாலை, குடத்தனை புனித அன்னை வேளாங்கன்னி நலன்புரி நிலையம் ஆகியவற்றில் இடம்பெயர்ந்து தங்கிவாழும் மக்களுக்கு வழங்கப்பட்டது.

அடுத்த தொகுதி பொருட்கள் ஏனைய பகுதி முகாம்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார். பொருட்களை வழங்குவதற்கு லயன்ஸ் கழகத்தினர் போக்குவரத்து வசதி செய்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சங்கானை பிரதேச செயலகத்தில் விரைவில் இடர் நிவாரணம்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கடற் தொழிலாளர்களுக்கான இடர் நிவாரணம், பிரதேச செயலகத்தால் மிகவிரைவில் வழங்கப்படவுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம்மேற்கு, சுழிபுரம் மத்தி, சுழிபுரம் கிழக்கு தொல்புரம்மேற்கு, மூளாய், பொன்னாலை ஆகிய கிராம சேவைகள் பிரிவுக்குட்பட்ட 375 கடற்தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பட்டியல் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நிவாரணம் குடும்ப அங்கத்தவர்களின் அடிப்படையில் ஒரு குடும்ப அங்கத்தவர் ஆயின் 1X200/= முத்திரையாகவும், 1X175/= பொருளாகவும், இரு குடும்ப அங்கத்தவர் ஆயின் 2X 200+ 2X175 இதன்படி ஒரு அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு 200 ரூபா முத்திரையாகவும், விரும்பிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 175 ரூபாவும் வழங்கப்படவுள்ளன. இந்தக் கொடுப்பனவு 4 அங்கத்தவர்கள் வரை அதிகரித்து செல்லும்.

ஐந்து அங்கத்தவர்களை கொண்ட குடும்பத்துக்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தவர்களை கொண்ட குடும்பத்துக்கு ஆயிரம் ரூபா முத்திரையாகவும் 875 ரூபா விரும்பிய பொருட்களை கொள்வனவு செய்ய வழங்கப்படவுள்ளது.

இந்த நிவாரணப் பொருட்கள் வாரத்தில் ஒருதடவை வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (207)

### மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்

கொக்குவில் பகுதியில் கடந்த சனிக்கிழமை மோட்டார் சைக்கிளில் வந்தவர் வீதிக்குக் குறுக்கே வந்த நாயுடன் மோதியதில் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பாண்டியன் தாழ்வை சேர்ந்த ஜென்றித் (வயது 53) என்பவரே சிகிச்சை பெற்று வருகிறார்.

### தைப்பூசத் திருவிழா

சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா இன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை சங்காபிஷேகம் இடம்பெற்று மதியம் 1.00 மணியளவில் அன்னதானம் இடம்பெறவுள்ளது. மாலை நிகழ்வாக விசேட பூசைகள இடம்பெற்று வைரவப் பெருமான் மின் ஒளிகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் வீதியுலா வருவார். (47)








நிறைஞ்சனாஸ் சங்கானை
மம்முட்டி, நந்திதாதாஸ் நடித்த
விஷ்வதுளசி
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ANACONDA 2


### சிறுவிளம்பரம்

**விற்பனைக்கு**

பாவனையிலுள்ள CANON 1215 போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் Super Fax 350 மொடல் றோணியோ இயந்திரமும் விற்பனைக்குண்டு

தொடர்பு:- ஆர்.மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம்.









### தவறிவிட்டது

'கந்த அகம்' குப்பிளான் ஏழலையைச் சேர்ந்த சின்னத்துரை சிவசுதன் என்பவருடைய, தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், அலுவலக அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை, என்பன அடங்கிய பேர்ஸ் 20.01.2005 வியாழக்கிழமை ஏ-9 பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பளை பிரதேசத்தில் அல்லது மேல் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு வேண்டுகின்றேன்.

(C/1039) எஸ்.சிவசுதன்

### சுனாமியால் அழிந்த

# சொத்துக்களை மதிப்பிடுவதில் அதிகாரிகளுக்குச் சிக்கல்!

இலங்கையில் சுனாமியால் பாதிககப்பட்ட மக்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்ய ஒரு வருடகாலம் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த மற்றும் அழிந்து போன சொத்துக்கள் தொடர்பாகத் தகவல்களைத் திரட்டுவதில் பாரிய தடங்கல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இன்னும் மீட்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதும், காணாமற் போனோர் இன்னும் கண்டுபிடிக்கப்படாமையுமே இதற்கான காரணங்களாகும்.

இந்த மக்களது சொத்துக்களின் சேதத்தை மதிப்பிட்டு, அவற்றுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் தாமதமாகும் என்று எதிர்பாாக்கப்படுகிறது.

இதேவேளை, அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கான கிடைத்த உதவிகளைக் கொண்டு, தமது வரவு - செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை நிவர்த்திக்கும் பணியில் ஈடுபடலாம் என்று எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (01)

## வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தில்

(கொழும்பு)

ஆறுமாதகால கற்கைநெறி எனபடும் டிப்ளோமா பயிற்சி பெற்றவர்களை மருத்துவர்களாக இணைத்துக்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இன்று மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதனால் இன்று நாட்டில் வைத்தியசேவைகள் முழுமையாகப் பாதிகப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் மருத்துவர்கள் ஆறு வருடங்கள் பயில வேண்டும். எனினும், ரஷ்யாவீல் ஆறுமாத பயிற்சி பெற்றவர்களை வைத்திய சேவையில் அரசாங்கம் இணைத்துக்கொள்வதை ஆட்சேபித்தே இன்று போராட்டம் இடம் பெறவுள்ளது. (01)

### இலங்கை படையினருக்கு

# வாங்கிய ஆயுதங்கள் தரம் குறைந்தவையாம்!

(கொழும்பு)

ஹெய்டியில் ஐக்கிய நாடுகள் சமாதானப் படையில் பணியாற்றுவதற்கென, இலங்கையிலிருந்து சென்ற படையினருக்காக இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத தளபாடங்கள் - தரம் குறைந்தவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தகவலைப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் சிறில் ஹேரத் வெளியிட்டார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையிலிருந்து ஹெய்டிக்கு சுமார் 750 படையினர் அமைதிகாப்புப பணிக்காகக் கடந்த வருடம் அனுபபி வைக்கப்பட்டனர். இவர்கள் எடுத்துச் செல்வதற்காக ஆயுத உபகரணங்கள் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன.

இதனைக் கொள்வனவு செய்த அதிகாரிகள் - தரம் குறைந்த உபகரணங்களையே கொள்வனவு செய்திருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாகக் ஹெய்டியில் உள்ள இலங்கை அமைதிப்படையினரின் ஆயுத தளபாடங்கள் செயலிழந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# ஹெலி உதிரிப்பாகங்கள் வந்தமை நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலாம்!

## பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால பாதிக்கப்பட்ட மக்களுக்கென கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிவாரண உதவிப் பொருட்களுடன், இரணடு ஹெலிகொப்டர்களின் உதிரிப்பாகங்களும் வந்துள்ளமை நாட்டுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும நிலையென பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வந்த இந்த உதிரிப்பாகங்கள் - மரத்தாலான பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்த விமானப்படைப் பேச்சாளர் கப்டன் அஜந்த டீ சில்வா- இதிலொன்று பெல் ஹெலியின் பாகங்களெனவும், மற்றைய விமானம் இன்னமும் இனங்காணப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

இந்தக் ஹெலிகளின் உதிரிப்பாகங்களை நிவாரணப் பொருட்களுடன் இங்கு கொண்டு வருவதற்கு விடுதலைப்புலிகள் ஏற்பாடுகளைச் செய்திருக்கலாமென, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார். விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் ஏற்படலாமென்பதற்காக, ஒவ்வொரு விடயமும் அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இந்தக் ஹெலி உதிரிப்பாகங்களை எவரும் இதுவரை உரிமை கோராததால், அது விமானநிலையத்திலேயே உள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் ஹெலி உதிரிப்பாகங்களை எந்த நாட்டிலிருந்து, யாரால் என்ன நோக்கத்துககாக இங்கு அனுப்பப்பட்டதென்பது தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருவதாகவும், அதுவரை இந்தக் ஹெலி உதிரிப்பாகங்கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எனவும் கப்டன் டீ.சில்வா தெரிவித்தார்.

எந்தவொரு இராணுவ தளபாடத்தையும் இங்கு கொண்டுவரவேண்டுமெனில், பாதுகாப்பு அமைச்சு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையுமே அனுமதி வழங்க வேண்டு மெனவும் அவர் தெரிவித்தார். (01,தே)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 300 மெகாவோட் அனல் மின் உலை

இந்தியாவின் தேசிய அனல் மின்சார கூட்டுத்தாபனம் - 300 மெகாவோட் அனல் மின்சாரத்தை இலங்கைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இத்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான யோசனைகளை இலங்கை அரசிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரவித்த - இநதிய மின்சார கூட்டுத்தாபனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சி.பி. ஜெயன் - இது தொடர்பாக தாங்கள் மிகவும் ஆர்வத்துடன் முள்ளதாகவும் தெரிவித்தார்.

பாரத ஹெவி மின்சார நிறுவனத்துடன் இலங்கை மின்சாரசபையும் இணைந்து சுமார் 15 பில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனை நிர்வகிப்பது தொடர்பாக இதுவரை எது விதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

### சுனாமியால் உயிரிழந்தவர்களின்

# அசையும் அசையா சொத்துக்களை எவரும் உரிமைகோர முடியாது

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் உயிரிழந்தவர்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை, எவரும் உரிமைகோருவதற்கோ அதனை அனுபவிப்பதற்கோ எவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்று நீதியமைச்சர் ஜோன் செனிவிரத்ன தெரிவித்தார்.

சுனாமி கடற்கொந்தளிப்பின் போது உயிரிழந்தவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கல், பெற்றோரை இழந்த குழந்தைகளின் பொறுப்புக்களை ஒப்படைத்தல் மற்றும் சொத்துக்களை நிர்வகிப்பது தொடர்பான ஒழுங்குவிதிகளைச் கொண்ட, சுனாமி அனர்த்த விவேக சட்டவரைபு தயாரிக்கப்பட்டு வருவதால், அந்த வரைபை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிது அனுமதி பெறப்படும்.

இவ்வாறு அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் கடன் பிணை, கூலி ஆட்சி உரிமைகள், பிணைப்புக்களை விடுவிப்பது, உரிமைக்கு உரித்தானவர்களுக்கு ஒப்படைத்தல் தொடர்பான சட்டவரைபு - டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி அந்த அழிவோடு தொடர்புபட்டிருப்பதால், அதனை நாடாளுமன்றத்தில் ஒப்படைப்பதாகவும் நிதியமைச்சர் தெரிவித்தார். (தே)

# சர்வதேச ரீதியான அங்கீகாரத்தை புலிகள் பெற்று வருகின்றனர்

## நியூஸ்வீக் சஞ்சிகை செய்தி

சர்வதேச மட்டத்தில் ஓரங்கட்டப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தற்சமயம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுவருவதாக 'நியூஸ்வீக்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

சுனாமியின் பாதிப்பின் பின்னர் சர்வதேச அபிவிருத்திக்கான அதிகாரிகள் தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்தித்துள்ளனர்.

இதனை இலங்கை அரசாங்கம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளவே வேண்டியுள்ள தென, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு, புஸ்ஸின் நிர்வாக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கும் மேலாக இத்தாலிய அதிகாரிகள் நேரடியாகவே தமிழீழ விடு தலைப்புலிகளிடம் நிவாரணப் பொருட்களைக் கையளித்துள்ளனர்.

இதேவேளை, சர்வதேச ரீதியாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தடைக்கு உட்பட்டுள்ளமையால், நாடுகள் அவர்களுக்கு ஊடாக நிவாரணங்களையோ அல்லது நடவடிக்கைகளையோ மேற்கொள்ளும்போது சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதைத் தமிழீழ விடுதலைப் புலிகள் உணரவேண்டும என்றும், அமெரிக்க ஜனாதிபதியின் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளதாக 'நியூஸ்வீக்' சஞ்சிகை தெரிவித்துள்ளது. (01)

### சுனாமி நிவாரணத்துக்கு 7200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாளாந்தம் வழங்கவென, சுமார் 7200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

ஒருவருக்கு 375 ரூபா என்ற அடிப்படையில் தற்சமயம் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள 8 லட்சம் பேருக்கு நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளன.

தற்போது 322 அகதி முகாம்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மன ஆற்றுப்படுத்தல் பயிற்சித் திட்டம்

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாக உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ரீதியான மன ஆற்றுப்படுத்தல் பணிகளை மேற்கொள்வதற்கான பயிற்சித்திட்டமொன்றை கொழும்பிலுள்ள சர்வதேச பயிற்சி நிதியம் இன்று முதல் தொடர்ந்து மூன்று நாட்கள் வரை யாழ். பீச் இன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சித் திட்டம் - யாழ்பபாணத்திலுள்ள சாந்திகம் அமைப்பின் மன ஆற்றுப்படுத்தும் செயலணியுடன் இணைந்து நடத்தவுள்ளது.

சீடா நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்தப் பயிற்சி நடைபெறவுள்ளது எனத் தெரியவருகிறது.

# இ.தொ.காங்கிரஸ் கட்சிக்குள் தொண்டமானுக்கு எதிர்ப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் - சுனாமி கடற்கொந்தளிப்பின் பின்னரும் நாடு திரும்பாது, வெளிநாடுகளில் தங்கியிருந்து காலம் கடத்தியமை கட்சிக்குள்ளே எதிர்ப்புத் தோனறியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மத்தியமாகாண உறுப்பினர் கோவிந்தராஜ், மலையக மக்கள் முனனணியின் தலைவர் பொ.சந்திரசேகரனுடன் சேர்ந்து, சுனாமி அழிவுகளைப் பார்வையிடுவதற்காக கிழக்கு பிரதேசத்துக்குச் சென்றிருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த தொண்டமான் -கோவிந்தராஜை தனது கட்சியிலிருந்து நீக்கிவிட்டார். இதனால் அவர் கட்சிக்குள் பெரும்பாலானவர்களின் விமர்சனத்துககுள்ளாகி இருப்பதுடன், எதிர்ப்பு அலைகளும் தோனற ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில் ஆறுமுகம் தெண்டமான் தனக்கு நெருங்கிய குழுவினரை அழைத்துக்கொண்டு, கிழக்கு மாகாணத்தில் சுனாமி அனர்தத்த்தை பார்வையிடுவதற்காகச் செனறுள்ளார்.

இவர் தனது விஜயத்தின்போது நலன்புரி நிலையங்களுக்குச் செல்லாது, தூரநின்றே பார்வையிட்டார்.

அத்துடன், ஜனாதிபதி சந்திரிகா உள்ளூராட்சி அமைச்சு வழங்குவதாக உறுதியளித்தபோதும், அந்த அமைச்சுப் பதவி இன்னமும் வழங்கப்படாமையால் தொண்டமான் ஆத்திரமடைந்துள்ளார்.

அத்துடன், அமைச்சுப்பதவி விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியை சந்திப்பதற்கு அவகாசம் கேட்டபோதிலும், அதற்கான அனுமதியும் கிடைககவில்லை.

இதனால் கட்சியின் எதிர்காலத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தொண்டமான் பின்னடித்து வருவதும், கட்சிக்குள் பெரும் எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது. (தே)

# சட்டவிரோத வெளிநாட்டு பயணத்தை தடுப்பதற்கு புதிய சட்டம் அறிமுகம்

(கொழும்பு)

விமானங்கள், கப்பல்கள் மூலம் பலர் சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்வதால், அதனைத் தடுக்குமுகமாக - குடியகல்வு, குடிவரவு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

இப்போதுள்ள சட்டத்துக்குப் பதிலாக, விசேட சரத்துக்களை உளளடக்கிய சட்டமூலம் அடுத்தவாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும், அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்றபின் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் நீதியமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவித்தார்.

புதிய சட்டத்தின்படி, சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# சுதந்திரக் கட்சி – ஜே.வி.பி முறுகல் நிலை தீவிரம்!

ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையிலான முறுகல்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இரண்டு கட்சிக்கும் இடையிலான வாதப் பிரதிவாதங்கள் தீவிரமடைநது வருகின்றன.

இதன் அடிப்படையில் நேற்று முனதினம் அமைச்சர் லால் கந்த அரசாஙகத்தின் நிவாரணப் பணிகளைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

அதேநேரம் ஜே.வி.பி நிவாரணப் பணிகளிலும், உதவி நடவடிக்கைகளிலும் தனித்தே செயற்பட்டு வந்தது.

இந்த நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதி அமைச்சர் டி.எம்.தசநாயக்க - ஜே.வி.பியின் நடவடிக்கைகளைக் கணடித்துள்ளார்.

தாம் மட்டக்களப்பு நிவாரணப் பணிகளுக்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், தமது பணிகள் குறித்து ஜே.வி.பி விமர்சனம் செய்திருப்பதை அவர் கண்டித்துள்ளார்.

தமது பணிகள் குறித்து விமர்சனம் செய்ய ஜே.வி.பிக்கு எந்தவித அருகதையும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

ஜே.வி.பி - தம்மை விட்டால் இலஙகையில் புத்திஜீவிகள் இல்லையெனவும், தாமே அரசாங்கத்தை நடத்திச் செலவதாகவ" நினைத்துக் கொண்டிருக்கிறது.

இது பிழையான கருத்தாகும். சிறிலங்கா சுதந்திரக்கட்சி மேற்கொண்ட நல்லெண்ண முயற்சியின் காரணமாகவே, ஜே.வி.பி முன்னிலைகளு வந்துள்ளது.

இதனை மறந்துவிட்டு, அந்தக் கட்சி பேசக்கூடாது என்றும் பிரதி அமைச்சர் டி.எம்.தசநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைநது செயற்படும் நிலையில், ஏற்பட்டு வருகின்ற இவ்வாறான முறுகல்கள் அரசாங்க நிர்வாகத்தில் சிக்கல்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## காலநிலை சீர்கேட்டால்

# செஞ்சூரியன் டெஸ்ட் போட்டி சமநிலை நோக்கி நகர்வு!



(செஞ்சூரியன்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இறுதி டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தநிலையில் மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்கள் என்றநிலையில் இருந்த தென்னாபிரிக்க அணி மூன்றாம் நாள் ஆட்டத்தின் தொடக்கத்திலேயே கடைசி விக்கெட்டையும் இழந்தது.

பிளின்ரொப், மற்றும் ஜோன்ஸ் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் ஹொகாட் மற்றும் கைல்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

ட்ரெஸ்கொதிக் - ஸ்ரரஸ் ஜோடி விரைவாகவே ஓட்டங்களைக் குவிக்க முயன்றது. இந்தநிலையில் ஸ்கோர் 27 ஆக உயர்ந்தபோது - அவசரப்பட்டு ஓடிய ட்ரெஸ்கொதிக் ரன் அவுட்டானார்.

இவர் 26 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 20 ஓட்டங்களைப் பெற்றார். இதையடுத்து றொபேர்ட் கீ களம் இறங்கியபோதும், பந்துகளை அடித்து ஆடமுடியாமல் சிரமப்பட்டார்.

8 பந்துகளை எதிர்கொண்டு ஒரே ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்ற இவர் பொலக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது ஸ்கோர் 29 ஆக இருந்தது. அடுத்ததாகவந்த அணித்தலைவர் மைக்கல் வோகனும் 4 பந்துகளை எதிர்கொண்டு எந்த ஒரு ஓட்டத்தையும் பெறாமலேயே பொலக்கிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

29 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 3 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இங்கிலாந்து அணிக்கு தோள் கொடுக்க தோர்ப் வந்தார்.

ஸ்ரரஸ் - தோர்ப் ஜோடி ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தது. உணவு இடைவேளைக்குப் பின்னர் இலேசான மழைத்தூறல் இருந்ததுடன் மைதானத்தில் வெளிச்சமின்மையால் ஆட்டம் தடைப்பட்டது.



பின்னர் மீண்டும் ஆட்டம் தொடங்கப்பட்டு ஸ்கோர் 114 ஐத் தொட்டபோது, ஸ்ரரஸ் ஆட்டமிழந்தார். 124 பந்துகளில் 4 பவுண்டரிகள், 1 சிக்சருடன் 44 ஓட்டங்களைப் பெற்றிருந்த இவரை, அன்ட்ரூ நெல் மைதானத்தைவிட்டு வெளியேற்றினார்.

இந்த நிலையில் மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் மைதானத்தில் போதிய வெளிச்சமின்றி ஆட்டம் முன்னதாகவே முடிக்கப்பட்டது. மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிவில் இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முதல்நாள் மற்றும் மூன்றாம் நாள் ஆட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டதால் இந்தப் போட்டி சமனிலையில் முடிவடையும் வாய்ப்புக்களே தென்படுகின்றன.

## அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ்

# காலிறுதிப் போட்டியில் பெடரர் - அகாஷி மோதல்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ரோஜர் பெடரர், ஆந்ரே அகாஷி, மரியா ஷரபோவா, குஸ்நட்சோவா ஆகியோர் தெரிவாகினர்.

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் தொடரின் நான்காம் சுற்றுப் போட்டிகளில் உலகின் முதல்நிலை வீரரான சுவிற்சர்லாந்தின் பெடரர், சைபீரியாவின் மார்கஸ் பாக்தாதியசை எதிர்த்து விளையாடினார்.

பெடரின் விரைவான ஷொட்களை எதிர்கொள்ளத் திணறிய இவர் முதல் இரண்டு செட்களில் எளிதில் தோல்வி அடைந்தார். பின்னர் மூன்றாவது செட்டில் ஈடுகொடுத்த பாக்தாதியஸ் 6-7 என்ற கணக்கில் போராடித் தோல்வியடைந்தார். பெடரர் 6-2, 6-2, 7-6 என்ற செட்களில் வெற்றிபெற்று, காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் எட்டாம் நிலை வீரரான அமெரிக்காவின் ஆந்ரே அகாஷி, சுவீடனின் ஜாஷிம் ஜோஹான்சனைச் சந்தித்தார்.

இந்தப் போட்டியில் ஜோஹான்சன் நிறைய ஏஸ் சேவிஸ்களை வீசினார். இவற்றைச் சமாளித்த அகாஷி 6-7, 7-6, 7-6, 6-4 என்ற செட்களில் போராடி வெற்றிபெற்றார்.. தோல்வி அடைந்தாலும் இந்தப் போட்டியில் ஜோஹான்சன் அதிக ஏஸ் சேவிஸ்களை வீசி புதிய உலக சாதனை படைத்துள்ளார். இவர் 51 ஏஸ் சேவிஸ்களை வீசி, முன்னாள் விம்பிள்டன் சம்பியன் ரிச்சாட் கிராஜிக்கின் சாதனையை முறியடித்துள்ளார். கிராஜிக், 1999 யு.எஸ்., ஓபன் தொடரில் ரஷ்யாவின் யுவ்ஜெனி காபெல்நிகோவுக்கு எதிராக 49 ஏஸ் சேவிஸ்களை வீசியுள்ளார். இவரும் இந்தப் போட்டியில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.


காலிறுதிப் போட்டியில் அகாஷி, பெடரருடன் மோதவுள்ளார்.

சுலோவாக்கியாவின் டோமிக் ஹர்படி 7-5, 6-3, 6-1 என்ற செட்களில் சுவீடனின் தோமஸ் ஜோஹான்சனை வீழ்த்தினார். ரஷ்ய வீரர் மாரட் சபின் 4-6, 7-6, 7-6, 7-6 என்ற செட்களில் பெல்ஜியத்தின் ஒலிவர் ரோக்கசை வீழ்த்தினார்

பெண்கள் பிரிவில் நான்காம் நிலை வீராங்கனையான, ரஷ்யாவின் மரியா ஷரபோவா, இத்தாலியின் சில்வியா பரீனா எலியாவைச் சந்தித்தார். முதல் செட்டில் எலியா அபாரமாக செயற்பட்டு 6-4 என்ற முன்னிலையில் வெற்றிபெற்றார். பின்னர் சுதாகரித்து ஆடிய ஷரபோவா தனது அனுபவ ஆட்டத்தின் மூலம் மிக எளிதாக கடைசி இரண்டு செட்களைக் கைப்பற்றினார். விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் ஷரபோவா 4-6, 6-1, 6-2 என்ற செட்களில் வெற்றி பெற்றார்.

மற்றொரு ரஷ்ய வீராங்கனையான சுவெட்லானா குஸ்நட்சோவா 6-4, 6-4 என்ற செட்களில் சகநாட்டு வீராங்கனையான வெரா டச்சிவினாவை வீழ்த்தினார். காலிறுதியில் ஷரபோவா, குஸ்நட்சோவா மோதுகின்றனர்.

இரண்டாம்நிலை வீராங்கனையான பிரான்ஸின் அமெலி மௌரிஸ்மோ 6-2, 6-4 என்ற செட்களில்



ரஷ்யாவின் எவ்ஜெனியா லினெட்ஸ்கயாவையும், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 6-1, 3-6, 6-3 என்ற செட்களில் ரஷ்யாவின் நாதியா பெட்ரோவாவையும் வீழ்த்தினர். காலிறுதியில் செரினா, மௌரிஸ்மோ சந்திக்கின்றனர்.

## சுனாமி நிவாரண கிரிக்கெட்

# மூன்று விக்கெட்டுக்களால் உலக லெவன் அணி வெற்றி



(வெலிங்டன்)

சுனாமி நிவாரண நிதிக்காக நியூஸிலாந்து கிரிக்கெட் சபை நடத்திய இரண்டாவது ஒருநாள் போட்டியில் உலக லெவன் அணி 3 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து அணியைத் தோற்கடித்தது.

முதல் போட்டியில் நியூஸிலாந்து அணி அபார வெற்றிபெற்ற நிலையில் இரண்டாவது போட்டி நேற்று நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உலக லெவன் அணி நியூஸிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

பிளெமிங் - அஸ்ரில் ஜோடி களமிறங்கி ஆடிக்கொண்டிருந்தபோது 13 பந்துகளில் 14 ஓட்டங்களைப் பெற்ற பிளெமிங் ஆட்டமிழந்தார்.

அடுத்து அஸ்ரிலுடன் சிங்கிளயர் களமிறங்கி அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். ஸ்கோர் 107 ஆக உயர்ந்தபோது சிங்கிளயர் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் 51 பந்துகளில் ஒரு பவுண்டரி ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களைக் குவித்தார்.

அடுத்து கெய்ன்ஸ் 9 ஓட்டங்களுடனும், மார்ஷல் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இந்தநிலையில் அஸ்ரிலுடன் மக்மிலன் இணைந்து நிதானமாக ஆடினார். இதனால் ஸ்கோர் உயர்ந்து 202 ஐத் தொட்டபோது 5 ஆவது விக்கெட்டாக மக்மிலன் வீழ்த்தப்பட்டார்.

மக்மிலன் 35 பந்துகளில் 3 சிக்ஸருடன் 33 ஓட்டங்களைப் பெற்றார். இதனையடுத்து களமிறங்கிய மக்கலம் ஓட்டமெதையும் பெறாமலேயே ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக விற்றோரி களமிறங்கினார். இவர் நின்றுபிடித்து ஆட எதிர்முனையில் சதமடித்து ஆடிக்கொண்டிருந்த அஸ்ரில் ஏழாவது விக்கெட்டாக வீழ்த்தப்பட்டார். இவர் 124 பந்துகளை எதிர்கொண்டு 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 109 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்பின்னர் வந்த வில்சன் 11 ஓட்டங்களுடனும், மில்ஸ் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு

விளையாட்டு

256 ஓட்டங்களை நியூஸிலாந்து அணி பெற்றது.

விற்றோரி 21 பந்துகளில் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் பிக்கல் 56 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், குளுஸ்னர் 2 விக்கெட்டுக்களையும்,



முரளிதரன், ஜெயசூரிய, வாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து உலக லெவன் அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. ஸ்கோர் 65 ஆக உயரும்வரை உலக லெவன் அணி வீரர்களை வீழ்த்தமுடியாமல் நியூஸிலாந்து பந்துவீச்சாளர்கள் திணறினர்.

முதல் விக்கெட்டாக நிக் நைற் வீழ்த்தப்பட்டார். 3 பவுண்டரிகள் 1 சிக்ஸருடன் 40 பந்துகளில் 29 ஓட்டங்களை இவர் பெற்றிருந்தார்.

அடுத்து ஆடவந்த ஜெயசூரிய ஒரு பவுண்டரியை அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். ஹிக் - எலியட் ஜோடி சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தபோது மூன்றாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது.

67 பந்துகளில் 3 பவுண்டரி 3 சிக்ஸர்களை விளாசி 57 ஓட்டங்களைப்



பெற்ற எலியட்டை - அஸ்ரில் வீழ்த்தினார்.

அடுத்து சங்ககார களமிறங்கினார். இவரும் பவுண்டரிகள், சிக்ஸர்களாக விளாசினார்.

இதற்கிடையில் ஹிக் 24 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். 1 பவுண்டரி 1 சிக்ஸருடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.

இதையடுத்து ஆடவவந்த ரொட்ஸ் 16 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ரன் அவுட்டானார். இதன்பின்னர் குளுஸ்னரும் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

உலக அணிக்கு நெருக்கடி அதிகரித்துக்கொண்டிருந்த சூழலில் சங்ககாரவும் ஆட்டமிழக்க நேரிட்டது. இவர் 60 பந்துகளை எதிர்கொண்டு 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 51 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்ததாக பிக்கல் - சமிந்த வாஸ் ஜோடி பொறுப்புடன் ஆடி விரைவாக ஓட்டங்களைக் குவித்தது.


இவர்களின் அதிரடியான ஆட்டத்தால் 47.5 ஓவரிலேயே உலக அணி வெற்றி இலக்கான 257 ஓட்டங்களை 7 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து பெற்றது.

ஆட்டநேர முடிவில் பிக்கல் 38 பந்துகளில் 2 பவுண்டரி 2 சிக்ஸருடன் 37 ஓட்டங்களையும், சமிந்த வாஸ் 19 பந்துகளில் 1 சிக்ஸர் 3 பவுண்டரிகளுடன் 22 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ரபி, மில்ஸ், கெயின்ஸ் விற்றோரி, அஸ்ரில், வில்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக நதன் அஸ்ரில் தெரிவுசெய்யப்பட்டார்.

# 2004ஆம் ஆண்டின் மிகச்சிறந்த விளையாட்டு வீரராக இர்பான் பதான் தெரிவானார்!



(லண்டன்)

சொனி தொலைக்காட்சி நிறுவனத்தின் 2004ஆம் ஆண்டுக்கான மிகச் சிறந்த சர்வதேச விளையாட்டு வீரர் விருது இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதானுக்கு வழங்கப்பட்டது.

அதேபோல், வாழ்நாள் சாதனையாளர் விருது இந்திய கிரிக்கெட்டின் முன்னாள் வீரர் பாரூக் இன்ஜினியருக்கு வழங்கப்பட்டது.

லண்டனில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், உலகின் முதல் நிலை கோல்ப் வீரர் பிஜியின் விஜய் சிங் ஆகியோரும் சிறந்த சர்வதேச விளையாட்டு வீரர் விருதுக்கான போட்டியில் இருந்தனர்.

2004ஆம் ஆண்டில் அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கு எதிராகச் சிறப்பாகப் பந்துவீசிய பதான், ஆண்டின் இறுதியில் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 96 ஓட்டங்களுக்கு 11 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 2004இல் 9 டெஸ்ட் போட்டிகளில் அவர் 38 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

மும்பாயைச் சேர்ந்த 67 வயதாகும் பாரூக் இன்ஜினியர் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுக் கொண்டார். 1961இல் சர்வதேசப் போட்டி களில் களமிறங்கிய அவர் 56 டெஸ்ட் போட்டிகளில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ளார். 100இற்கும் மேற்பட்ட பிடிகளை எடுத்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 46 பந்துகளில் அவர் சதமடித்த சாதனை இதுவரை முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனின் பளுதூக்குதல் வீரர் ஜர்னால் சிங் பிரிங், சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதைப் பெற்றார். தேசிய, ஐரோப்பிய மற்றும் உலக சம்பியன் பட்டங்களை அவர் வென்றுள்ளார்.

17 வயதாகும் அமீர்கான், 2004 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டு வீரர் விருதைப் பெற்றார். ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டையில் பிரிட்டனுக்கு வெள்ளிப் பதக்கத்தை அவர் பெற்றுத் தந்தார்.

# மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தலைவர் திட்டங்களை வகுத்துள்ளார்!

## யாழ்.அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

போரால் எமது மக்களின் அடிக்கட்டுமானங்கள் அழிக்கப்பட்ட நிலையில், தற்போது ஏற்பட்ட சுனாமி கடற் கொந்தளிப்பால் மக்களின் மேல் கட்டுமானமும் சிதைக்கப்பட்டுள்ளது.

எமது தலைவர் இன, மத வேறுபாடின்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்பத் திட்டமொன்று வகுத்துள்ளார், என யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 12 ஆவது நினைவு தினம் யாழ்.கிட்டு பூங்காவில் நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன் தலைமையில் நடைபெற்றது.

இங்கு இளம்பரிதி உரையாற்றுகையில் -

கேணல் கிட்டு எமது போராட்டத்தில் மரபுவழிப் போருக்கான அடித்தளத்தை இட்டதுடன், போராட்டம் தொடர்பாக சர்வதேச தொடரபாளராக ஆரம்ப கட்டத்தில் செயறபட்டவர்.

கிட்டு அண்ணாவின் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறுகிறது. எமது விடுதலைப் போராட்டத்தையும், புலிகளின் பலத்தையும் சர்வ தேசம் அறிந்துகொண்டுள்ளது.

சுனாமி கடற் கொந்தளிப்பால் வடக்கு - கிழக்கில் 13ஆயிரத்து 171 பேர் மரணமடைந்ததுடன், 5ஆயிரத்து 905 பேர் காணாமல் போயுள்ளனர். 6ஆயிரத்து 747 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் பெரும்பாலான மக்கள் இறப்பதற்கும், காயப்படுவதற்கும் காரணம் - இராணுவ முகாமகளில் காணப்பட்ட முட்கம்பி வேலிகளே என வைத்தியசாலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 4 லட்சத்து 18 ஆயிரத்து 528 பேர் சுனாமி யின் காரணமாக இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களுக்காக அரசு



மனிதநேய அடிப்படையில் செயற்பட வேண்டும்.

ஐ.நா செயலர் கொபி அனான வந்தபோது பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட இலங்கை அரசு ஒழுங்குகள் மேற்கொள்ளாது தடுத்துள்ளது.

இந்த விடயம் இலங்கை அரசுக்கு சர்வதேசரீதியில் அபகீர்த்தியை ஏற் படுத்தியுள்ளது. எமது தலைவர் தொடர்பான விசமத்தனமான செய்தியை அரச ஊடகம் பரப்பியது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையே ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

# நெடுந்தீவில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலுக்காக நடமாடும் சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது.

இதன் முன்னாயத்த நடவடிக்கையாக - நெடுந்தீவு செயலகத்தில் அனுமதிப்பத்திரம் பெற விரும்புவோரது பெயர், விபரங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

போக்குவரத்துச் சிக்கல் காரணமாக யாழ்.நகர் சென்று அனுமதிபபத்திரம் எடுப்பதிலுள்ள பிரச்சினைகளை நிவர்த்திசெய்யும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச செயலக எல்லைக் குட்பட்டவர்களுக்கு மாத்திரமே இந்த நடமாடும் சேவை மூலம் மோட்டார் சைக்கிள் சாரதி அனு மதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)



சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பருத்தித் துறை மக்களுக்கு மானிப்பாய் லியோகழகத்தால் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை சக்கோட்டை தேவாலயத்தில் வைத்து முன்னாள் லியோகழகத் தலைவர் லோ.மீரா - பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உதவிப் பொருளை வழங்குகின்றார். அருகில் லியோ கழகத் தலைவர் ரி.விஜயகுமாரும் காணப்படுகிறார். (101)

# ஆலயங்களின் சமூகப் பணிகள் அருகிக்கொண்டே வருகின்றன

## பல்பொருள் அங்காடி திறப்புவிழா நிகழ்வில் ரவிராஜ்



இன்று எமது ஆலயங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுவது அருகிக்கொண்டு செல்வதைப் பார்த்து வேதனைப்படுபவரகளில் நானும் ஒருவனாக இருக்கிறேன் என, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்தார்.

தியாகி அறக்கொடை நிறுவனத்தினரால் நேற்றையதினம் ஆரம்பித்துவைக்கப்பட்ட பல்பொருள் அங்காடி திறப்புவிழா நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

அண்மையில் சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிறிஸ்தவ மதகுருமார் மக்கள் மத்தியில் நின்று சேவை செய்தனர் என்பதை நான் நேரடியாகவே கண்டேன்.

இந்தச் சமுதாயத்திலே, இப்படியான சமூகப்பணிகளை வளர்ப்பதற்கு எங்கள் ஆலயங்கள் முன்வரவேண்டும். எங்கள் ஆலயங்களைச் சேர்ந்த எத்தனை பேர் சபையினர் இவ்வாறான பொதுப் பணிகளில் முன்னின்று உழைததிருக்கின்றோம் என்று எங்களை நாங்களே கேட்டால், எங்களுக்கே வெட்கமாய் இருக்கிறது.

எங்கள் சமூகத்திலே இருக்கக்கூடிய மக்கள் எங்கள் உறவுகளுக்குத் தேவையானவற்றை வழங்குவதன் மூலம்தான், ஆண்டவனின் அருளைப் பெற்றக்கொள்ள முடியும்.

கஷ்டப்படுகின்ற குழந்தைகளுக்குப் படிப்பதற்கு உதவிசெய்திருக்கின்றோம் என்று எங்களை நாங்களே கேட்கவேண்டும். எத்தனை ஆலயங்கள், எத்தனை நிறுவனங்கள் அருகிலுள்ள முன்பள்ளிகளுக்கு உதவி செய்திருக்கிறார்கள் எனக் கேட்கவேண்டும்.

எங்கள் ஊர்களிலே மூலைக்கு மூலை கோவில்களின், தர்மகர்ததா சபைகள், பரிபாலன சபைகள் - ராஜகோபுரங்கள், மணிமாடங்கள், சுற்றுமதில்கள் என்பனவற்றை அமைப்பதில்தான் ஈடுபட்டுள்ளன. விரல் விட்டு எண்ணக்கூடிய ஓரிரண்டு ஆலயங்கள்தான், சமூகப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.

ஆலயங்கள் என்ன சமூகப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றன என, நாங்கள் எங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அதை விட்டு விட்டு மதமாற்றம் என்று நாங்கள் அழுது பிரயோசனம் இல்லை. அதைத் தடுப்பதற்கு நாங்கள் என்ன செய்யமுடியும். நாங்கள் எங்கள் மக்களை நோக்கி உதவிக்கரம் நீட்டுவதற்காக எமது ஆலயங்களை மாற்றி அமைக்க வேண்டும். இந்தக் கருத்து பலருக்குக் கசப்பாக இருக்கலாம். இதன் மூலமாக எனது செல்வாக்குக்கூட மறைந்துவிடலாம். அதையிட்டு நான் கவலைப்படப்போவதில்லை. எண்பது லட்சம், நூறு லட்சம் செலவழித்து ராஜகோபுரம் அமைக்கின்றோம். அருகிலேயுள்ள முன்பள்ளி ஓலைக் குடிசையிலே இயங்கிக் கொண்டிருப்பதையிட்டு நாங்கள் ஒருபோதும் சிந்திப்பதில்லை. தயவுசெய்து நாங்கள் இதை மாற்றி அமைக்க வேண்டும்.

இன்று நாவலர் மணிமண்டபத்திலிருந்து நிகழ்வுகள் ஆரம்பமாகியன. தமிழையும், சைவததையும் வளர்த்த நாவலர் பெருமான் காலத்திலே, மதமாற்றம் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்திலே, எப்படி எங்கள் மக்களைக் காப்பாற்றினார் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும்.

இவற்றை நாங்கள் தரிசனங்களாகப் படித்துக்கொண்டு, அவற்றைத் தேற்றிக்கொண்டு நடைமுறை வாழ்க்கையிலே இவற்றை நடக்காமல் இருந்து கொண்டு யாரையும் குறைசொல்லி எங்கள் சமூகத்தை நாங்கள் முன்னேற்ற முடியாது.தயவுசெய்து இப்படியான தியாகிகளின் வாழ்க்கையை, இப்படிப்பட்ட பெரியோர்களின் வாழ்க்கையை நாங்கள் பார்க்கவேண்டும்.

எங்களுடைய உறவுகளுக்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட எங்கள் உறவுகளைக்கூட நாங்கள் பார்த்தோம், உபசரித்தோம் இல்லையென்று கூறவில்லை. தொடர்ச்சியாக இதைச் செய்ய வேண்டும். ஆகவே எங்களுடைய ஆலயங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடவேண்டும் என வற்புறுத்துகிறேன். அதற்காக நாங்கள் எங்களை மாற்றி அமைக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

## அவசர கலந்துரையாடல

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான அவசர சந்திப்பு - இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் இந்தச் சந்திப்பில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து



பெயர் : ஆ.அஷான் ஹர்ஷன

முகவரி : சிவானந்த பவனம், அல்வாய் தெற்கு, அல்வாய்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------------

முகவரி :----------------

பிறந்த ஆண்டு:----------------

கூப்பன்கள் பத்தும்,

----------------

பெற்றோர் ஒப்பம்




ரீடோ நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு, மருந்துப் பொருட்கள் அடங்கிய வாகனத்துடன் முல்லைத்தீவுக்குப் பயணமாவதைப் படத்தில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### அடிக்கல் நாட்டல்

(கொக்குவில்)

ஆனைக்கோட்டை அருள்மிகு பிடாரி அம்பாள் தேவஸ்தான, ராஜ கோபுர கட்டுமானப் பணிக்கான அடிக்கல் நாட்டுவைபவம் இன்று நடைபெறவுள்ளது. (206)

### ஆறுகால் மடத்தில் கடை உடைத்துத் திருட்டு

(கொக்குவில்)

ஆறுகால் மடத்திலுள்ள பல சரக்குக் கடையொன்று நேற்று முன்தினம் கதவுகள் உடைக்கப் பட்டு, பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மேற்படிக் கடையில், வைககப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பணம், சிகரட், பால்மாவகைகள், பிஸ்கட் வகைகள் என்பனவே திருடப்பட்டிருப்பதாக, யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (206)

### தைப்பூசத் திருவிழா

யாழ்ப்பாணம் செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில், இன்று காலை 10 மணிக்கு தைப்பூசத் திருவிழா அபிஷேகமும், அர்ச்சனை வழிபாடும், தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

☆☆☆

கைதடி உக்களை ஸ்ரீ விநாயகப் பெருமான் தேவஸ்தானத்தில் இன்று காலை 8 மணிக்கு தைப்பூசத் திருவிழாவும், அர்ச்சனை வழிபாடும் இடம்பெறவுள்ளன.

### உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்து

நெடுந்தீவு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சைக்கிள்கள், இரட்டை மாட்டுவண்டில்களுக்கான 2005 ஆம் ஆண்டுக்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு நெடுந்தீவு பிரதேசசபையினர் அறிவித்துள்ளனர்.

இந்த மாதம் முடிவதற்குள் உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளதுடன், தவறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன.(113)

### சிறுவர்களுக்கான நோய் எதிர்ப்பு மருந்து

தேசிய நோய் எதிர்ப்பு சக்தியளிக்கும் திட்டத்தினூடாக கெபடைட்டிஸ் "பி" எதிர்ப்பு சக்தி மருந்து சிறுவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்த முறை 2005 ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு இந்த நோய் எதிர்ப்பு சக்தி மருந்து வழங்கப்படவுள்ளது.

இந்த மருந்தை தாய் - சேய் நிலையங்களில் சிறுவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கலாம் என, சுகாதாரப் போசாக்கு சமூக நலன் அமைச்சு அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுசரணை வழங்குகிறது.

பல்சுவை அரங்கு

# குறையும் சூரிய சக்தி


கடந்த ஐந்து தசாப்த காலமாகக் கணக்கெடுக்கப் பட்டுவந்த சூரிய ஒளியினுடைய அளவு தற்போது சற்றுக் குறைந்துள்ளதாக இந்த ஆய்வில் ஈடுபட்டுவந்த விஞ்ஞான ஆய்வாளர்கள் வருகிறார்கள்.



ஒரு காலகட்டத்தில் சூரிய ஒளிச்சக்தி அதாவது - சோலர் சக்தி மிகவும் அதிகமாகக் கிடைத்துவந்தது. ஆனால் தற்போது இந்தச் சக்தியின் அளவு குறைந்து கொண்டுவருகிறது. இந்தக் குறைவை முதன்முதலில் கண்டுபிடித்த விஞ்ஞானி ஜெரி ஸ்ரான்கில். இவர் இஸ்ரேலில் பணியாற்றுகின்ற ஒரு ஆங்கிலேய விஞ்ஞானி ஆவார். இவருடைய கருத்துப்படி 1950 ஆம் ஆண்டுகளில் இஸ்ரேலில் காணப்பட்ட சூரிய ஒளி - தற்போது 22 வீத அளவுக்குக் குறைந்திருக்கிறது. இதேவேளை - 10 வீதம் அமெரிக்க ஐக்கியநாடுகளிலும் சோவியத் யூனியன் நாடுகளில் (முன்னர்) 30 வீதமும், அத்துடன் பிரித்தானியாவில் 16 வீதமும் சூரிய ஒளிச்சக்தி குறைந்து காணப்படுகிறது. இதற்குரிய காரணமாக முகில்களில் காணப்படுகின்ற சல்பர் அளவின் அதிகரிப்பு சூரிய ஒளியை மறைப்பதற்காகக் கூறப்படுகிறது. சாதாரண முகில்களினூடு சூரிய ஒளி ஊடுருவும் திறன் கொண்டது. ஆனால் மாசடைந்த முகில்களினூடு சூரிய ஒளி ஊடுருவமாட்டாது. இதேவேளை - சூரிய வெப்பம் சடுதியாக அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. புவியின் சூழலில் ஏற்படுகின்ற காபனீரொட்சைட்டின் அதிகரிப்பு, இந்த வெப்பநிலை அதிகரிப்பில் தாக்கம் செலுத்துகிறது. விஞ்ஞானிகளின் கூற்றுப்படி ஒட்சிசனின் அளவிலும்பார்க்க, காபனீரொட்சைட்டின் அளவு எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது.

# ஈரலைப்பாதிக்கும் விற்றமின்கள்

பலநோயாளர்கள் இயற்கையான உணவுப் பொருட்களைவிட விற்றமின் குளிகைகளையே அதிகம் விரும்பி எடுக்கிறார்கள். இதற்குரிய காரணம் - விற்றமின்கள் உடலை வளர்க்கின்றன. அத்துடன் நோயையும் எதிர்க்கின்றன. விற்றமின் A குளிகைகள் மிகவும் முக்கியமானவை. இந்த விற்றமின்களை உணவுப்பொருட்கள் மூலம் பெறுவது மிகவும் கடினம். இதன்காரணமாக மக்கள் கூடுதலாக விற்றமின் குளிகைகளை எடுக்கிறார்கள். கூடுதலாக விற்றமின் குளிகைகளை எடுப்பவர்களுக்குத் தற்போது மருத்துவ விஞ்ஞானிகளால் ஒரு எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. அதிகமான விற்றமின் குளிகைகளின் பாவனை அவர்களுடைய ஈரலைப் பாதிக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது.



இதனைத் தடுப்பதற்கு இந்தக் குளிகைகளுக்குப் பதிலாக வல் லாரை மற்றும் கரட் உணவுகளை அதி கம் உணவில் சேர்க்குமாறு விஞ்ஞானி கள் நோயாளிகளை அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் நிறை உணவில் விற்றமின் A காணப்படுவதாகக் கூறப்படுகிறது. வயது முதிர்ந்தவர்கள் கூடுதலாக விற்றமின் A உணவுகளை எடுக்கிறார்கள். ஏனெனில் வயது முதிர்ந்தவர்களுடைய எலும்புகள் மற்றும் தசைநார்கள் பாதிப்படைந்து, பலம் குறைந்தவையாகின்றன. இதனால் அவர்கள் விற்றமின் குளிகைகளை கைவிடமுடியாதுள்ளது.

# ஐஸ்கட்டி ஐஸ்கட்டி



ஆர்டிக் மற்றும் அந்தாட்டிக்கா கண்டத்தில் ஐஸ்கட்டிகள் குவிந்திருப்பது தெரிந்தவிடயம்தான். ஆனால் அந்தாட்டிக்காவில்தான் பனிமழையுடன் பனிப் பாறைகளும் குவிந்து காணப்படுகின்றன. ஏறக்குறைய 160 மீற்றர் நீளமான ஐஸ் கட்டிகளைக் கொண்ட பாறைகள் அமெரிக்க விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. P15A என்று பெயரிடப்பட்ட இந்தவகைப் பனிப்பாறை செய்மதிகள் மூலம் தான் கண்டறியப்பட்டது. ஆரம்பத்தில் அந்தாட்டிக்கா பிரதேசத்திலுள்ள பென்குயின்கள் இடம்பெயரத் தொடங்கின. அதற்குரிய காரணத்தை சரியாக அறியமுடியவில்லை. ஆனால் பென்குயின்களுடைய இடம்பெயர்வுக்குக் காரணம் கடும்குளிரை உருவாக்கியுள்ள பனிப்பாறைகள் எனக் குறிப்பிடப்படுகிறது.

இதனுடைய நீளம் மட்டுமல்ல, இது காணப்படுகின்ற பரப்பளவு 3 ஆயிரம் சதுரகிலோ மீற்றர்களாகும். 2000 ஆம் ஆண்டிலிருந்து இந்தப்பனிப்பாறைகள் உருவாகத் தொடங்கியதாகவும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். நாஸா விஞ்ஞான ஆய்வுகூடம் தற்போது இந்தப் பாறைகளை எவ்வாறு உடைப்பது என்று ஆய்வுசெய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

# வளரும் இயந்திர மனிதர்களின் தொகை

'ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு இயந்திர மனிதன்' என்ற வாக்கு நிறைவேறும். நாம் வெகு தொலைவில் இல்லை எனத் தொழிநுட்ப நிறுவனங்கள் அடித்துக் கூறுகின்றன. அது மட்டுமல்ல, முதல் தொடக்கத்தில் இயந்திர உற்பத்தியில் ஜப்பானே முன்னிலை வகித்தது. ஆனால் இப்போது பெரும்பாலான மேற்இந்திய நாடுகள் இயந்திர மனிதர்களை உற்பத்தி செய்வதில் ஊக்கமாக இருக்கின்றன. இயந்திரத்தனமான செல்லப் பிராணிகள் மற்றும் மிருகங்களை உற்பத்தி செய்வதிலும் பார்க்க, மனிதத்துவம் மிக்கச் செல்லப் பிராணிகளை உற்பத்தி செய்வதில் அதிக அக்கறை காட்டவேண்டும் எனப் பெரும்பாலான இயந்திர மனிதர்களை உற்பத்தி செய்யும் கம்பனிகள் கருதத் தொடங்கியிருக்கின்றன. மக்கள் இருந்த பொழுதிலும் பொழுதுபோக்காகவே கணினி இயந்திர மனிதர்களைக் கருதுகின்றார்கள். ஏறத்தாழ 2007 ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் இயந்திர மனிதர்களை உலகளாவியரீதியில் ஒவ்வொருவரின் வீடுகளிலும் காணமுடியும் எனக் கூறப்படுகிறது. இதனைக் கூறியது ஜக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இயந்திர மனிதர்கள் பற்றிய அறிக்கை. ஆனால் ஜக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொருளாதாரக் குழுவினுடைய அறிக்கையின்படி, 4.1 மில்லியன் இயந்திர மனிதர்களை உலகம் முழுவதிலுமுள்ள வீடுகளில் காணலாம்.



# கார் போன்



உலகிலேயே தற்போது சந்தைக்கு வந்திருக்கின்ற கூடுதலான கார்கள் எல்லாவற்றிலும் போன் வசதிகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக கார்களில் கராஜ்போல போன் சேர்விஸ் செய்கின்ற பல வசதிகள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் பெரும்பாலானவர்கள் கார்போன் வசதிகளை அவ்வளவாக விரும்பவில்லை. ஆனால் தற்போது கார்போனைப் பாவிப்போர் தொகை 25 வீதமாக அதிகரித்திருக்கிறது.

கார் மொபைல் போன்களை உற்பத்தி செய்கின்ற மொபைல் போன் கம்பனிகள் - தம்மிடையே போட்டி போட்டுக்கொண்டு, இவற்றைப் புதிது புதிதாகச் செய்திருக்கின்றன. இவற்றில் 3 ஜி விடியோ கையடக்கத் தொலைபேசிகள் கார்போன்களின் உலகில் தனக்கென ஒரு முத்திரை பதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2005 ஆம் ஆண்டளவில் கார்களினுடைய போன் பாவனை - ஏறக்குறைய மீண்டும் 7.5 வீதத்தால் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் கார்போன்களின் விற்பனை 355.8 மில்லியன்கள் ஸ்ரேலிங் பவுண்கள் எனவும் கருதப்படுகிறது. நடந்து முடிந்த கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, பல மொபைல் போன் கம்பனிகள் பல சலுகைகளை வழங்கியிருந்தன. அவற்றில் ஒன்றுதான் கார் மொபைல் போன்களுக்கான சலுகை.

# மீன் வேண்டாம்



சுனாமிப் பேரழிவு ஏற்பட்டு ஒருமாதமாகிறது. ஆனால் இலங்கைக் கடற்கரை மீனவர்கள் இன்றும் தங்களுடைய மீன்பிடித் தொழிலைக்கட்டியெழுப்பமுடியாதவாறு தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள். சில நாடுகளில் ஏறக்குறைய முக்கால்பங்கு மீன்படிப்படகுகள் சுனாமியால் அழிந்துபோய்விட்டதாகத் தரவுகள் கூறுகின்றன. இலங்கையிலும் 80 வீதமான மீன்பிடிச் சாதனங்கள் அழிந்துபோயிருக்கின்றன அல்லது காணாமற்போயிருக்கின்றன. இதேபோலத்தான் இந்தோனேசியாவின் வடமேற்குப்பகுதி அத்துடன் வடக்கு சுமாத்திராத்தீவுப்பகுதியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் காணப்படுகின்ற 12 பிரதானமான மீன்பிடித் தளங்களுள் 10 மீன்பிடித்தளங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தாய்லாந்தில் மட்டும் 4 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகள் சேதமாகியிருக்கின்றன. இதேபோல சோமாலியாவில் 2 ஆயிரம் மீன்பிடி சாதனங்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. ஆசிய நாடுகளைச் சேர்ந்த மீனவர்களுக்குத் தங்களால் ஆன உதவியைச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது. எமது நாட்டிலும் இன்றும் மக்கள் மீன்கள் மற்றும் கடலுணவுகளைச் சாப்பிடுவதற்குத் தயாரில்லை. தற்போது மீன்களின் விலை வீழ்ச்சியடைந்திருக்கிறது.

# பரிதாபமான குழந்தை

எமது உடலிலே காணப்படுகின்ற உறுப்புக்களை மாற்றி, சத்திரசிகிச்சை செய்வது வெற்றியளித்திருக்கிறது! ஆனால் எட்டு உடலுறுப்புக்களை மாற்றிச் சத்திர சிகிச்சை செய்யப்பட்ட இத்தாலி நாட்டைச் சேர்ந்த குழந்தை ஒன்று – ஆறு மாதங்களில் தனது வாழ்க்கையை முடித்துவிட்டது. அலிசியா டி மட்டியோ என்ற புதிதாகப் பிறந்த குழந்தை, பிறக்கும் போதே முக்கியமான சில உறுப்புக்களின் செயற்பாடுகளை இழந்து பிறந்தது. இதன் காரணமாக – ஈரல், வயிறு, சிறுகுடல், பெருங்குடல், மற்றும் சிறுநீரகங்கள் ஆகியனவற்றைச் சத்திர சிகிச்சை செய்து மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தக் குழந்தையினுடைய தசை நார்கள் மிகவும் மெல்லியவை. இதன் காரணமாக இதனுடைய சத்திரசிகிச்சை பெரிதாக வெற்றியளிக்க வில்லை என, மியாமி வைத்திய சாலையின் பேராசிரியர் அன்டிரீஸ் சாகிஸ் கூறுகிறார்.




இவர் ஒரே நேரத்தில் உடலின் 7 உள் உறுப்புக்களை மாற்றி அறுவைச்சிகிச்சை செய்ததில் வெற்றிபெற்றவர். ஆனால் இவருடைய மருத்துவத் தொழிலில் சரித்திரத்தில் ஒரு கரும்புள்ளி என அவருடன்கூட இருக்கிற வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

# திரை விமர்சனம்


எப்பொழுதோ தொடங்கப்பட்ட படம் இது. இப்போது ஒரு மாதிரி வெளிவந்து விட்டது. பல வெற்றிப் படங்களைத் தந்த இயக்குநர் அகத்தியனின் படம்.




வெளிநாட்டில் உள்ள பெரிய தொழில் அதிபர் ஜெய் ஆகாஷ். தன்னை அடையாளம் காட்டாமல் ஒரு சிறிய கிராமத்தில் வாழ்ந்து பாசத்தை உணர்கிறார்.

தொழில் அதிபர் ஆகாஷிக்குத் தாய் சரண்யாமேல் அன்பு. மற்றையபடி பணத்தின் மேல் காதல். தாய் இறக்கின்றபோது தந்தையை யார் எனக் கூறுகிறார்.

கிராமத்தில் ஊர்ப் பெரியவர் விஜயகுமார் வீட்டில் வேலை செய்து அங்கு கிராமத்து பெண் ஸ்ரீதேவிகாவைக் காதலிக்கிறார். விஜயகுமார்தான் இவருடைய தந்தை என்று ஜெய் ஆகாஷிக்குத் தெரிந்துவிடுகிறது. ஆனால் இதனை ஊருக்குத் தெரிவிக்க முன், அவர் இறந்து விடுகிறார். ஆனால் அவருடைய மனைவி மக்கள் பாசத்துடன் ஜெய் ஆகாஷை ஏற்கின்றனர். இறுதியில் அவர் பெரிய மனிதர் என்பது தெரிந்ததும் முழுக்கிராமமுமே திகைக்கிறது.



ஜெய் ஆகாஷ் அருமையாக தனது நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். பெரிய தொழில் அதிபர் வேடம், கிராமத்தவர் வேடம் என நடித்து இருக்கிறார். புதுமுகம் ஸ்ரீதேவிகாவின் நடிப்பு அற்புதம். வழமைபோல் விஜயகுமார் வெற்றிகுமார்தான். சரண்யா அருமையாக தாயாக நடித்திருக்கிறார். சார்லி, சிசர், மனோகர் முத்துக்காளை நகைச்சுவை பார்க்கக் கூடியதாக இருக்கிறது. தேவாவின் இசையில் பாடல்கள் கேட்கும்படியாக இல்லை. பல வெற்றிப்படங்களைத் தந்த வெற்றி இயக்குநர் அகத்தியனுக்கு நீண்ட இடைவெளி தந்த தோல்வி என்றே கூறவேண்டும்.

ராமகிருஷ்ணா – நாமம் .

– சங்கீதா –


# தொடர் குளிர்



ரஷ்யாவின் வடமேற்குப் பிரதேசத்தில் காணப்படுகின்ற ஒரு மிருகக்காட்சி சாலையாகிய சென்பீற்றர்ஸ்பேர்க் மிருகக்காட்சிசாலையில் இருக்கின்ற பனிக்கரடிகள் தொடர்ச்சியாக நித்திரை செய்து கொண்டிருக்கின்றன. இதற்குரிய காரணங்களை ஆராய்ந்து பார்க்கின்றபொழுது – வெப்பநிலைக் குறைவுக்கு மிக முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. அத்துடன் பால்டிக் பிரதேசத்திலும் வெப்பநிலை கடுமையாக வீழ்ச்சியடைந்திருப்பதனால், அங்கே காணப்படுகின்ற சில விலங்கினங்கள் தொடர்ச்சியாக சோம்பேறித் தன்மையுடன் வாழப்பழகிக் கொண்டிருக்கின்றன. விலங்கியல் விஞ்ஞானிகளது கருத்துப்படி, இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொடர்ச்சியான குளிர் காலம் இந்த விலங்குகளுக்குரிய சாபக்கேடாக இருக்கிறது எனக் கூறப்படுகிறது. ஆனால் ரஷ்யாவின் மேற்குப்புறத்தில் 10 பாகை வெப்பநிலை காணப்படுவதால், அங்கே இலைதுளிர் காலத்துக்குரிய பூக்கள் பூக்கத் தொடங்கியிருக்கின்றன. ஆனாலும் தொடர்ச்சியாக வெப்பநிலை வீழ்ச்சி இருக்கிறதே ஒழிய, வெப்ப அதிகரிப்பு என்பது ரஷ்யாவின் முனைவுப் பிரதேசத்தில் குறைவுதான்.

# மக்மினி கணினி

கணினி உலகில் முதற்தர நிறுவனமாகிய அப்பிள் கம்பனி – தற்போது புதியவகை மக்மினி கணினி ஒன்றை உலகுக்கு அறிமுகப்படுத்த இருக்கிறது. இது தற்போது காணப்படுகின்ற கணின்ியிலும் பார்க்க, மிகவும் சிறியது. இந்த மக்மினி கணினியினுடைய அளவு 5cm x 16.5cm ஆகவும், நிறை 1.32 கிலோகிராம் உடையதாகவும் உள்ளது. இதன் மீடிறன் 1.25/1.4 ஜிகா கேட்ஸ். இதனுடைய ரம் 256 மெகாபைட்ஸ். அத்துடன் கார்ட் டிரைவ் 40/80 ஜிகா பைட்ஸ்களாகவும் இருக்கிறது. இது கொம்போ டிவிடி மற்றும் சிடி ரைட்டர் டிரைவ்களைக் கொண்டது. இதனுடைய விலை ஐரோப்பிய நாடுகளில் 339 ஸ்ரேலிங் பவுண்களாகும். அத்துடன் அமெரிக்காவில் 499 ஸ்ரேலிங் பவுண்களாகவும் இருக்கிறது.




இது ஜனவரி மாதம் 22 ஆம் திகதியளவில் சந்தைக்கு விற்பனைக்கு வரும் எனக் கூறப்படுகிறது. அப்பிள் கம்பனியினுடைய தலைவர் ஸ்ரீவ் ஜொப்ஸுடைய கருத்துப்படி, இந்தவகைக் கணினிகள் பெரும்பாலும் வாடிக்கையாளர்களால் விரும்பப்படும் எனவும், இதன் விற்பனை சடுதியாக அதிகரிக்கும் எனவும் கருதப்படுகிறது.


தற்போது காணப்படுகின்ற எல்சிடி மொனிட்டர்களிடையே இந்த மக்மினிக் கணினிகளுக்கும் கொடுக்க இருக்கிறோம் எனவும் அப்பிள் கம்பனி தெரிவித்துள்ளது.

# புதிய நட்சத்திரங்கள்

மூன்று மிகப்பெரிய நட்சத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கண்டுபிடிப்பு ஏற்பட்டிருப்பதால், வானிலையாளர்கள் மத்தியில் மிகவும் பரபரப்பான செய்தியாக இது பேசப்படுகிறது. அமெரிக்காவின் வானிலையாளர்கள் கழகத்தால் இந்தக் கண்டுபிடிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. கே டபிள்யூ சகிட்டாறி (இது 9 800 ஒளியாண்டுகளுக்கு அப்பால் இருக்கிறது). V 354 செப்பி (9000 ஒளி ஆண்டுகளுக்கு அப் பால் உள்ளது). கோவை சிட்னி (5200 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளது). இந்த மூன்று புதிய நட்சத்திரங்களும் மிகவும் பிரகாசமானவை எனக்கூறப்படுகிறது. வானியல் ஆய்வாளர்கள் இன்று நேற்று இந்த ஆய்வுகளைத் தொடங்கவில்லை. அவர்கள் கடந்த இரண்டு சதாப்தங்களின் முன்னரே இந்த ஆய்வு முயற்சிகளைத் தொடங்கிவிட்டார்கள். இந்த நட்சத்திரங்களை ஆய்வு செய்யமுடியாததற்கு காரணம் – இவற்றுக்கிடையே காணப்படுகின்ற சிவப்பு நட்சத் திரங்கள். ஏறத்தாழ எமது பால் வீதியில் 74 சிவந்த நட்சத்திரங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.



# எயிட்சிலிருந்து குரங்குகளுக்கு பாதுகாப்பு



எயிட்ஸ்நோய்க்கான மருந்துகளை ஆராய்ந்து கொண்டு வருகின்ற ஆய்வாளர்கள் அதிர்ச்சியான தகவல் ஒன்றைத் தற்போது வெளியிட்டிருக்கின்றார்கள். அதாவது – குரங்குகளுக்கும் எச். ஐ. வி. நோயைக் குணமாக்க முடியும் என்பதுதான். காலகாலமாக எச். ஐ. வி. நோய்க்கான ஆய்வுகள் மனிதனுக்கும், குரங்குகளுக்கும் ஒரே மாதிரியாகத் தான் செயற்பட்டுவருகின்றன. அத்துடன் இரண்டு பேருக்குமே 90 வீதம் ஒற்றுமையைக் கொண்டிருப்பது ஆய்வுகளுக்கு சுலபமாகிறது.

யு. எஸ் எயிட்ஸ் நிறுவனத்தின் தகவல்களின்படி, கடந்த 2004 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உலகளாவியரீதியில் 39.4 மில்லியன் மக்கள் அதிலே 37.2 மில்லியன் வயது வந்தவர்களும், 2.2 மில்லியன் பிள்ளைகளும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

குரங்குகளில் காணப்படுகின்ற சில நிறமூர்த்தங்கள் – மனிதர்களுக்கு ஒத்ததாகவும், சில வேறுபாடு உடையதாகவும் இருக்கின்றன. இதன் காரணமாகத்தான் எச். ஐ. வி நோய்க்கான சில விளைவுகள் மனிதர்களுக்குப் பொருந்தாதுள்ளன எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

# சகல வசதிகளும் கொண்ட இரு நகரங்கள் வடமராட்சி கிழக்கில் அமைப்பதற்குத்திட்டம்

சுனாமி கடற்கொந்தளிப்பு காரணமாக முற்றாக அழிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்பும் நோக்குடன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, திட்டமிடல் குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினார். இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக்குழு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதி முற்று முழுதாகப் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டும். பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைப்பதன் மூலம், பாடசாலைகளை இயங்க வைக்கமுடியும். இந்தக் கலந்துரையாடலின்போது பின்வரும் தீர்மானங்களும் முன்வைக்கப்பட்டன.

* நாகர்கோவில் தொடக்கம் சுண்டிக்குளம் வரை கடற்கரையில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் கடல்நீர் உட்புகாதவாறு மண் அணை அமைத்தல்.

* நாகர்கோவில் தொடக்கம் சுண்டிக்குளம் ஊடாக முல்லைத் தீவு வரை கடற்கரையிலிருந்து 600 மீற்றர் தூரத்தில் பிரதான வீதி அமைததல்.

* தற்போது வழங்கப்பட்ட கூடாரங்கள் பாவனைக்கு ஏற்றதாக இல்லாமையால், அதைவிடுத்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் கிடுகினாலான கொட்டகைகள் அமைத்தல். (கிணறு, கழிப்பறைகள்உட்பட)

* ஒவ்வொரு கிராமங்களிலும் நிரந்தரக்குடியிருப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நிரந்தர வீடுகள் தனியாகவும், 12 வீடுகள் கொண்ட தொடர் வீடுகளாகவும் அமைத்தல்.

* வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சகல வசதிகளும் கொண்ட துறைமுகம் ஒன்று சுண்டிக்குளம் தொடுவாயில் அமைத்தல். இதன் மூலம் வருடம் முழுவதும் இந்தப் பிரதேசத்தில் 32 அடி - 40 அடி நீளமான பாரிய படகுகள் மூலம் தொழில் செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

* வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சகல வசதிகளும் கொண்ட இரு நகரங்கள் அமைத்தலுக்காக மருதங்கேணியும், மணற்காடும் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டன. இந்த நகரங்களில் சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலை, தரம் 6-13 வரையான வகுப்புக்கள் கொண்ட பாடசாலைகள் உட்பட சகல அரச அலுவலகங்களும் அமையவுள்ளன.

* அமைக்கப்படும் மண் அணைக்கு அண்மையில் பனை, தென்னை, சவுக்கு மரங்கள் நடுதல்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய திட்டமிடல் குழுவினருடன் சேர்ந்து செயற்பட 10 கிராம அலுவலகர் பிரிவுகளிலுமிருந்து 10 பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

திட்டமிடல் குழுவின் கூட்டம் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக் குழுக்கட்டட பணிமனையில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது (21)



வன்னிப் பதிவுகள்

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜனவரி 25

1885 :-சர்வதேச ஹொக்கிப் போட்டி இன்றுதான் முதல் முதலாக "ரைல்" என்ற இடத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் அயர்லாந்து வேல்சை வெற்றி கொண்டது.

1922 :-சுன்னாகத்தைச் சேர்ந்த தமிழறிஞர் குமார சுவாமிப்புலவர் இன்று காலமானார்.

1945 :-குடிநீர் சுத்திகரிப்புக்காக இன்றுதான் முதல் முதலாக குளோரின் பயன்படுத்தப்பட்டது. மிக்சிகன் என்ற இடத்தில் இது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

1949 :-புதிதாக உதயமாகிய இஸ்ரேல் நாட்டினது நாடாளுமன்றமான "நெஸ்ஸட்டி" இற்கு முதன் முதலாகத் தேர்தல் நடைபெற்றது இன்றாகும். 3000 அரேபியர்கள் உட்பட 427,000 பேர் இந்ததேர்தலில் வாக்களித்தனர்.

1971 :-ஆபிரிக்காவின் உகண்டா நாட்டில் இராணுவப் புரட்சி மூலம் மேஜர் ஜெனரல் இடி அமீன் ஆட்சியைக் கைப்பற்றிய நாள் இன்றாகும்.

1979 :-சோவியத் இராணுவம் இன்று ஆப்கானிஸ்தான் பகுதிகளில் பலவந்தமாக புகுந்து கொண்டது. அது 1989 பெப்ரவரி 15ஆம் திகதியே ஆப்கானை விட்டு வெளியேறியது.

1981 :-சீனாவின் ஆட்சியைக் கைப்பற்ற சதி செய்தமைக்காக சீன அதிபர் 'மாஸே துங்கின' மனைவி "ஜியாங்க்விங' உட்பட நான்கு பேருக்கு சீன அரசு இன்று மரண தண்டனை விதித்தது.

1988 :-பாரத நாட்டின் மிக உயர்ந்த விருதான "பாரதரத்னா" விருது முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு இந்த ஆண்டு வழங்கப்படுவதாக அறிவிப்பு வெளியாகிய நாள் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

# இடைத்தங்கல் முகாமைஅமைப்பதற்கு நூற்றைம்பது கூடாரங்களே வந்துள்ளன

**-முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவிப்பு -**

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கான இடைத் தங்கல் முகாம்களை அமைத்துக் கொள்வதற்காக, இதுவரை 150 கூடாரங்களே வந்து சேர்ந்துள்ளன என, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மேரி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிகமாக குடியமர்த்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வழங்கப்பட்ட கூடாரங்களைக் கொண்டு உண்ணாபிலவில் ஒரு தொகுதி இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டு வருகிறது.

இதில் கள்ளப்பாடு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் உள்ள கிணறுகள் பாவனைக்கு உகந்தது அல்ல என, பரிசோதனையின் மூலம தெரியவந்துள்ளது, குடிநீர் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் தான் அருந்தமுடியும்.

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தின் அழிந்துபோன உபகரணங்களைக் கொள்முதல் செய்ய புனர்வாழ்வு அமைச்சிடமிருந்து ஏழு மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

மாவட்ட செயலகம் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கி விட்டதெனவும், அடுத்த சில வாரத்தில் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நியாப் II திட்டத்தின்கீழ் இரணைமடு புனரமைப்பு!

(கிளிநொச்சி)

நியாப் II திட்டத்தின் கீழ் ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் இரணைமடு நீர்த்தேக்க புனரமைப்பு எதிர்வரும் ஜூன்மாதம் ஆரம்பிக்கப்படும் என, கிளிநொச்சி மாவட்ட நியாப்பணிப்பாளர் வினோதராஜா தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

இரணைமடு அணைக்கட்டு புனரமைப்பு முதற்கட்டப்பணி 100 மில்லியன் ரூபா செலவில் இடம் பெறவுள்ளது. இதற்கான மதிப்பீட்டுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருவாரத்துக்குள் இந்தத் திட்டத்தை அங்கீகரித்து அதற்கான நிதியை நியாப் நிறுவனம் வழங்கும் எனத் தெரிவித்தார்.

மேலும் இந்தப் புனரமைப்புப் பணிக்காக இந்தமுறை இரணைமடுவின் கீழான சிறுபோகநெற்செய்கை, வலதுகரை வாய்க்காலின் கீழ் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும் இடதுகாரை வாய்க்காலில் நெற்செய்கை நடைபெறமாட்டாது எனவும் தெரிவித்தார்.

# வாய்க்கால் நீர் வெளியேறுவதால் போக்குவரத்துச் செய்வதில் சிரமம்

இராமநாதபுரம் பிரதேசத்திலிருந்து வட்டக்கச்சி சந்தையடிக்குச் செல்லும் வீதியில் உள்ள வாய்க்கால் நீர் வெளியேறி வருவதால், இந்தப் பகுதி மக்கள் பிரயாணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியில் உள்ள கோஸ்வேயில் அதிகளவான மண் தேங்கிக் காணப்படுவதால், இந்தப் பகுதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. இதனால் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்டவர்கள் இதனை கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

# நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார சேவை

சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுகாதார சேவைகள் அனைத்தும் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் ஒருங்கமைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் - சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுகாதார மருத்துவ சேவைகளை ஒருங்கிணைத்து மேற்கொண்டு வருகிறது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சிகிச்சைகளை மேற்கொள்ள புலம் பெயர் நாடுகளிலிருந்து வந்துள்ள மருத்துவர்களையும், வெளிநாடுகளின் மருத்துவர்களையும் ஒழுங்குபடுத்தி அவர்கள் பணியை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் 20 வரையான நோயாளர் காவு வண்டிகள் மற்றும் தொண்டர்களுக்கான வாகனங்கள் என்பன நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மருத்துவப் பொருட்கள் தேவைப்படும் இடங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் புலம்பெயர்ந்த மக்களின் உதவிகள் மூலம் மேற்கொள்ளப்படுவதாக நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## பொது நோக்கு மண்டபம் திறக்கப்படவில்லை

பூநகரி - செல்வபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுநோக்கு மண்டபம் இதுவரையில் திறந்து வைக்கப்படவில்லை.

நியாப் திட்டத்தின்கீழ் இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டப வேலைகள் யாவும் நிறைவடைந்து - 4 மாத காலமாகியும் இதுவரையில் திறந்து வைக்கப்படவில்லை என, இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். அத்துடன் இந்தக் கட்டடத்தினுள் தற்கொழுது கால்நடைகள் தங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலம் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து செய்வதில் சிரமம்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புக்கும் - முள்ளியவளைக்கும் இடையிலான வீதியில் பேராறின் கிளைகள் மீது அமைக்கப்பட்ட பாலங்கள் யாவும் வெள்ளத்தால் சேதமடைந்துவிட்டன. இதனால் இந்தப்பகுதி மக்கள் போக்குவரத் துச் செய்வதில் பெரும் சிரமங் களை எதிர் கொண்டு வருகின் றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர், இந்த வீதியில் 3 பாலங்கள் அமைக்கப்பட்டன. எனினும் பாலங்கள் ஏற்றவகையில் உரிய தரத்துடன் அமைக்கப்படவில்லை. இதனால் அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக பேராறில் ஏற்பட்ட அதிகளவு நீரோட்டத்தால் 3 பாலங்களும் சிதைவடைந்து விட்டன.

இதனால் இந்த வீதியு,டாக எந்தவொரு வாகனமும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. தற்பொழுது புதுக்குடியிருப்புக்கும் - முள்ளியவளைக்கும் இடையிலான போக்குவரத்து முல்லைத்தீவு ஊடாகவே நடைபெற்று வருகிறது.

# முன்னுரிமைப்படுத்தப்பட்ட இடங்களில் கண்ணிவெடி அகற்றும்பணி ஆரம்பம்

தமிழர் தாயகப் பிரதேசத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட இடங்களில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் கண்ணிவெடி இனங்காணப்பட்ட சில பகுதிகள் முன்னுரிமைப் படுத்தப்பட்டு, கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

ஒலுமடு, ஒட்டுசுட்டான், கட்டைக்காடு, தட்டுவன்கொட்டி, இயக்கச்சி, கண்டாவளை, மாங்குளம், புளியங்குளம், மாசார், கோவில்வயல் ஆகிய பகுதிகளிலே கண்ணிவெடி அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# துணைப்படை வீரரின் இறுத் அஞ்சல் நிகழ்வுகள்

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட கடற்கொந்தளிப்பின் போது, தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்தார்.

கண்டியைச் சொந்த முகவரியாகவும், விசுவமடு - பாரதிபுரம் குளத்தடியை நிரந்திர முகவரியாகவும் கொண்ட எலிப் முத்தையா சுந்தரமூர்த்தி என்ற துணைப்படை வீரரே சாவடைந்தவராவர்.

இந்த மாவீரரின் வித்துடல் விசுவமடு மாவீர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டு, இறுதி வணக்க நிகழ்வுகள் இடம் பெற்றது.

விசுவமடு வர்த்தகர் சங்கத் தலைவர் ஞானம் தலைமையில் இடம்பெற்ற இறுதி வணக்க நிகழ்வில் - பொது ஈகச்சுடரை மாவீரரின் துணைவியும், பிள்ளைகளும் ஏற்றி வைத்தனர். இறுதி வணக்க உரையை விசுவமடு பிரதேச பொறுப்பாளர் றூபன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் மாவீரனின் வித்துடல் தாங்கிய பேழை எடுத்துச் செல்லப்பட்டு, விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் விதை குழியில் விதைக்கப்பட்டது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரில் வன்கணார் இல.

*திருக்குறள்*

# நமது நோக்கு

## அரசியல் சுயநலப் பங்காளிகளும்; அவர்களில் மேலாதிக்கப் போட்டியும்!

'காசு கொடுத்தே வில்லங்கத்தை வாங்கிக்கட்டிக் கொள்வது' என்று சொல்வார்கள். பதவியும் அந்தஸ்தும் வழங்கியே வில்லங்கத்தை வாங்கிக்கட்டிக்கொண்டு அவஸ்தைப்படுபவர் ஒருவர் இருக்கிறார் என்றால் அது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவேதான் .

அற்பத்தனமானதும், சுயநலத்தின் அடிப்படையிலானதும், தேசநலனைக் கருத்தில்கொள்ளாததுமான சந்தர்ப்பவாத அரசியல் அபிலாஷைகளை கவனத்தில் குவிமையப் படுத்திக்கொண்டு, கடந்த தேர்தலில் கேட்போர் புத்தியைக் கேட்டு ஜனதா விமுக்தி பெரமுன என்றழைக்கப்படும் நவீன பேரினவாதக் கட்சியுடன் தனது கணவரைப் படுகொலை செய்த கும்பலின் கட்சி என்றுகூடச் சிந்திக்காமல்-கூட்டணி வைத்துக்கொண்டதன் விளைவுகளை இப்போது அவர் மோசமாக எதிர்கொள்ளவேண்டியவராகி உள்ளார்.

பல்வேறு உள்நோக்கத்துடனும், தொலைநோக்கு அரசியல் திட்டத்துடனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டை வைத்துக்கொண்ட ஜே.வி.பியினர் ஆரம்பத்தில் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுக்கள் நடந்தபோதே ஜனாதிபதி புத்திசாலித்தனமாக மேற்கொண்ட ஒரு சதி நோக்குடனான புரிந்துணர்வு உடன்பாட்டில் அவரிடமிருந்து பல வாக்குறுதிகளைப் பெற்றுக்கொண்டனர் என்ற விடயம் இப்போது அவர்கள் வாயால் பகிரங்கமாக்கப்பட்டு வருகின்றது.

அப்போது அவர் அவதந்திரமாக வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் இப்போது ஜே.வி.பியினர் அவரை மிரட்டி, அச்சுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

இப்போது அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளில் பிரதானமாக இரு கட்சிகளான சி.ல.சு.கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கருத்தியல் முரண்பாடுகள் ஒருவரை ஒருவர் மேலாதிக்கம் செய்யும் முனைப்புடன் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதன் எதிரொலிகள் நாளுக்கு நாள் அறிக்கைகளாக வெளிவந்து, கூட்டணிக்குள்ளான குத்துவெட்டை சந்தி சிரிக்கவைத்துக்கொண்டிருக்கிறது.

கடந்த சில தினங்களாக இந்த இருதரப்பு கருத்தியல் முரண்பாட்டு மோதல்கள், ஏட்டிக்குப் போட்டியெனத் தொடரும் அறிக்கைப் போர் காரணமாக ஆட்சியே பலவீனப்படும் நிலைக்கு விரிசலை உண்டாக்கும் அளவுக்கு மோசமாகிப் போயுள்ளதெனலாம்.

தங்களால் தான் ஜனாதிபதி தனது ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்டிருப்பதாகத் தம்பட்டம் அடித்துவரும் ஜே.வி.பியினர், ஜனாதிபதியைச் செல்லாக் காசு என்ற தொனிப்பட வர்ணித்து அவமதித்த சம்பவம் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றது நினைவிருக்கலாம். அதன்பின்னர் ஜே.வி.பியனருக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான உறவுகள் பெரும்பாலும் சிதைந்தே போய்விட்டன.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார பலத்தையே தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தம்மிஷ்டபடி அவரை ஆட்டிவைக்கத் திட்டமிட்ட ஜே.வி.பியினர், ஜனாதிபதி - பண்டா பரம்பரையின் அரசியல் வாரிசு என்பதை மறந்து போனமை அவர்களின் பலவீனமேயாகும் ஓரளவுக்கு அவர்களின் போக்குக்கு விட்டுக்கொடுப்பதைப் போன்று சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பான விடயங்களுட்பட பல பிரச்சினைகளில் அவர் நடந்துகொண்டாலும், தனக்குக் கடிவாளமிட அனுமதித்ததில்லை.

ஜே.வி.பியை அவர் சந்தேகத்துக்குரிய, விசுவாசமற்ற, எட்டத்தில் வைத்திருக்கவேண்டிய ஒரு மோசடிக் குணாம்சம் மிக்க பங்காளியாகவே ஜனாதிபதி கருத்தில் கொண்டிருந்தார் என்றால் அது மிகையில்லை.

- ஆனால், ஓட்டவும் - வெட்டிவிடவும் இயலாத ஒரு உறவைப் பேணவேண்டிய பங்காளி.


- எனனும், சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக, அமெரிக்காவுடனான இலங்கையரசின் உறவுகள் தொடர்பாக நோர்வேயை அவமதித்த விடயம் தொடர்பாக ஜே.வி.பியினரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் தனக்கு சர்வதேச ரீதியில் ஏற்பட்டுவரும் அழுத்தங்களால் நொந்து போயுள்ள ஜனாதிபதி, சில நடவடிக்கைகளை ஜே.வி.பியைப் புறந்தள்ளிவிட்டு மேற்கொண்டதில் அவர்கள் சீற்றம் கொண்டதையடுத்து நிலைமைகள் மோசமடையத் தொடங்கின.

'சுனாமி'யை தமது அரசியல் பிரசார நடவடிக்கைக்காகப் பயன்படுத்தும் ஜே.வி.பியினரின் போக்கை உணர்ந்துகொண்டு, அரச ஊடகங்களில் அதற்கான தளத்தை அனுமதிக்க மறுத்துத் தடைசெய்த விதம் ஜே.வி.பியினருக்கு கசப்பை ஏற்படுத்தியதில் வியப்பில்லை. இவ்வளவு நாளும் வீரவன்சவும், ரில்வின் சில்வாவும் கத்திப் பலனின்றிப்போக இப்போது அந்தத் தலைமறைவு தலைவர் சோமவன்ச அமரசிங்க - நேரடியாக ஜனாதிபதிக்கெதிரான அச்சுறுத்தலை பகிரங்கமாகவே விடத்தொடங்கிவிட்டார்.

சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளில் அரசு புலிகளுடன் இணைந்து செயற்படுவதை ஏற்கமாட்டோம் என கூறியுள்ள சோமவன்ச, ஜனாதிபதி தங்களுடனான உடன்பாட்டை மீறிச் செயற்பட்டால் விளைவுகள் பாரதுரமானதாக இருக்கும் எனவும் எச்சரித்துள்ளார். இந்த நிலையில் ஜனாதிபதி தேசத்தின் நலனையா, அரசின் நலனையா முக்கியத்துவப் படுத்தப் போகிறார் என்பதே இப்போதைய கேள்வியாகும்.

இதற்கான பதில் ஜே.வி.பியை - ஜனாதிபதி கையாளும் முறையிலேயே தங்கியிருக்கப்போகிறது.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# செய்மதிகளும் தீயவற்றைத்தான் தேடிப் படம் பிடித்து அனுப்புமோ?

சுனாமிப் பேரழிவால் ஏற்பட்ட இழப்புக்களை எப்படி ஈடுகட்டலாம்?

வீடுவாசல்களையும், பொருள் பண்டங்களையும் இழந்து நிர்க்கதியாக நின்றவர்களைப் பாதுகாத்து, உறவுகளை இழந்தவர்களுக்கு ஆறுதல் கூறி, உடுதுணிகள் வழங்கி, உணவு கொடுத்துப் பசியாற்றி இப்பொழுது மக்கள் ஓரளவு ஆறுதலடைந்துள்ளனர்.

இவர்களுக்கு இப்பொழுது தேவை தங்களுடைய தொழிலை மீண்டும் தொடங்கி, தங்கள் சொந்தக் காலிலேயே நிற்பதற்கான தொழிலுக்கான உபகரணங்கள் அவர்கள், தங்கியிருப்பதற்கான அவர்களுக்கென சொந்த வீடு.

சுனாமியால் பாதிக்கப்பட்டு எல்லாவற்றையும் இழந்து நிற்கும் கரையோரப் பகுதிகளின் நிலை இன்று இதுதான்.

இந்த நிலையில் எம் மக்களுக்கு வேண்டிய புனர்வாழ்வு பற்றியே தமிழர் தாயகத்தில் விடுதலைப் புலிகள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், செயற்படுகிறார்கள். அரசுடனும் ஒத்துழைக்கின்றார்கள்.

இந்த நிலையில் சிங்கள ஊடகங்கள் கடற் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புப் பற்றியே எழுதிக்கொண்டிருக்கின்றன. இதுமட்டுமல்ல விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பது பற்றியும், அவர்கள் போருக்கு ஆயத்தமாகிக்கொண்டிருப்பதாகவும் அவை எழுதிக்கொண்டிருக்கின்றன.

இனவெறியையே கக்கிக்கொண்டிருக்கும் "திவயின" என்ற சிங்களத் தினசரியில் கீர்த்திவர்ணகுல சூரிய என்பவர் ஒருபெரிய கட்டுரை எழுதியிருக்கிறார்.

"எமது கடற்புலிகளுக்குப் பாரதூரமான இழப்பொன்றும் ஏற்படவில்லையென்று கடற்புலிகளின் தலைவரான சூசை கடந்த பல நாட்களுக்குள் வெளிநாட்டு ஊடகங்களுக்கு விபரங்களைக் காட்டிக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார். எனினும் எட்டுச் செய்மதிகள் இலங்கைக்கும் மற்றும் தமிழ்நாட்டுக்கும் சுனாமி காரணமாக ஏற்பட்டுள்ள அழிவுகளைக் கண்காணிக்கின்றன என சூசை அறியமாட்டார். 5 ஸ்பொட் 4 ஆகிய பிரான்சின் செய்மதிகளும் இந்தியாவினுடைய ஐ.ஆர்.என் (I.R.N) செய்மதி மற்றும் கனடா ராடார்சற் மற்றும் என்.வி.சற் (N.V.Z) எனும் பெயருடைய வாணியச் செய்மதிபோல் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இராணுவச் செய்மதியும் இலங்கையில் அழிவுக்குட்பட்ட பிரதேசங்களை மிகத் துல்லியமாகப் புகைப்படம் எடுத்திருக்கின்றன.

"இந்த ராடார்சற் செய்மதியின் காட்சிகளைக் கனேடியர்களால் கண்காணித்துப் பார்க்கும் சற்றிற் எனும் பெயருடையதான செய்மதிக் காட்சிகளை மீளாய்வு நிறுவனத்துக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

"அங்கு ஏற்பட்டுள்ள அழிவுகளை ஆய்வுசெய்து அதன் விபரங்களை மீளாய்வு நிறுவனம் கனடா அதிகாரிகளுக்கும் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

"கனேடியர்களுக்கு மேலதிகமாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளின் செய்மதியும், வடக்கு - கிழக்கு உண்மை நிலைமைகளைச் செய்மதிப் புகைப்படங்களில் காணக்கூடியதாக இருக்கும்" என்று இந்தக் கட்டுரை தொடர்கிறது.

செய்மதித் தகவல்களை அறிந்துகொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிதி திரட்டத் தொடங்கியதாகவும் இந்த நிதியின் மூலம் யுத்த உபகரணங்களை வாங்குவதற்குரிய முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் கட்டுரையாளர் கூறுகிறார்.

சில தினங்களுக்குமுன் மகாத்மா காந்தியின் மூன்று குரங்குப் பொம்மைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தப் பொம்மைகள் தீயதைப் பார்க்காதே, தீயதைப் பேசாதே, தீயதைக் கேட்காதே என அறிவுறுத்தும் காட்சிகள். கொழும்பு ஊடகங்களில் இதேபோல் நல்லதைப் பார்க்காதே, பேசாதே, கேட்காதே என்று ஏதாவது இருக்கிறதோ தெரியவில்லை என்று எழுதியிருந்தேன்.

'திவயின'வில் கீர்த்திவர்ணகுலசூரிய எழுதியிருப்பதைப் பார்த்தால் செய்மதிகளிலும் தீயதைப் பார், தீயதைப் பேசு, தீயதைக் கேள் என்றே தீயதைக் காட்டும் புகைப்படங்கள்தான் அவை பிடித்து அனுப்புமோ என்று இந்தக் கட்டுரைத் தலைப்பைப் பார்த்ததும் சந்தேகம் தோன்றியது.

செய்மதி சரியாகத்தான் உள்ளதை உள்ளபடியே அனுப்பியிருக்கிறது. இந்தக் கட்டுரையாளர் உருப்படியாக எதையும் சொல்லாமல் விஷம் கக்கும் விஷயங்கள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு சாம்பாராகவே தயாரித்திருக்கிறார். சிங்களப் பொதுமக்கள் இலங்கையில் என்ன நடக்கின்றதென்பதை அறிந்துகொள்ளாதவர்களாக இருப்பதற்கு இந்தக் கட்டுரைகள்போல சிங்கள ஊடகங்கள் வெளியிடுவதே காரணமாக இருக்கவேண்டும்.

எட்டுச் செய்மதிகள் இயங்குவது சூசைக்குத் தெரியாமலிக்கவேண்டும் என்று ஏதோ பெரிதாகக் கண்டுபிடித்துவிட்டதாகக் குறிப்பிட்டிருந்த கட்டுரையாளர் இந்தச் செய்மதிதான் உலக நாடுகளில் இவர்களின் புருடா செயல்படாமல் போனதற்குக் காரணம் என்பதை உணரவில்லைப் போலும்.

கொழும்பு ஊடகங்களின் அடாவடித் தனங்கள் இனி எடுபடுவது கஷ்டம். வெளிநாடுகளிலிருந்து சுனாமி அலைகளின் அழிவுகளைப் பார்க்கவந்த வெளிநாட்டுத் தலைவர்களும் அரச பிரதிநிதிகளும் மட்டுமல்ல வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் இங்கு நடந்த, நடக்கின்ற உண்மைகளையும் கண்டறியும் வாய்ப்புப் பெற்றனர்.

இயற்கை ஏற்படுத்திய அழிவு தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இரண்டாவது பேரழிவென்றும், முதலாவது சுனாமி ஏற்படுத்தியது. இலங்கை அரசபடைகள் ஏற்படுத்தியபோர் அழிவு என்பதைத் தேசியத் தலைவர் எடுத்துச்சொல்லியிருந்ததை வெளிநாட்டவர் நேரில் பார்க்கக்கூடிய வாய்ப்பை சுனாமி ஏற்படுத்தியிருக்கிறது.

நிர்க்கதியான மக்களுக்குப் புனர்வாழ்வழிக்கும் யோசனைகளிலும், திட்டங்களிலும் மக்கள் அமைப்புக்களும், விடுதலைப் புலிகளும் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் புலிகள் போருக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள், சிறுவர்களைக் கடத்துகிறார்கள் என்று கொழும்பு ஊடகங்கள் புரளியைக் கிளப்பிக்கொண்டிருக்கின்றன.

உண்மையில் இந்த நேரத்தில் போர்த்தளபாடங்களைப் பற்றியும், ஆயுதங்களைப் பற்றியும் படைத் தரப்பே அக்கறையாகச் செயல்படுகிறது.

முப்படைத் தளபதியும் கடற்படைத் தளபதியுமான தயாசந்தகிரி கடற் படைக்கு அதிவேகத்தாக்குதல் படகுகள் பத்து உட்படப் பல சாதனங்கள் வாங்குவதில் தீவிரமாக இருப்பதாக சண்டே லீடர் பத்திரிகை வாரவெளியீட்டில் பெரிய கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. பலகோடி ரூபாய் பெறுமதியான இழப்பு கடற்படைக்கு சுனாமியால் ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சமயத்தில் மேலும் பல கோடி ரூபாய் பெறுமதியான போர்ச்சாதனங்கள் வாங்குவதற்குக் கடற்படை திட்டமிடுகிறது.

அரசியல் விவகாரங்களை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு இயற்கை அழிவால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மக்களை மீட்பதுதான் இப்போதுள்ள முதல்வேலை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்து - புனர்வாழ்வு, புனரமைப்புப் பற்றிச் சிந்திப்பதாக மற்றொரு ஆங்கிலத் தினசரி தெரிவிக்கின்றது.

உருப்படியான விஷயங்களில் விடுதலைப் புலிகளும், மக்களும் சிந்திக்கையில் போர்பற்றியும், போர்ச்சாதனங்கள் வாங்குவதற்கும் புலிகள் பணம் திரட்டுவதாகவும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் கயிறு திரிக்கின்றனவென்றால் கையாலாகாத எங்கள் அறிக்கை வாதிகளும் இதேபுரட்டுக்களைத் தங்கள் இணையத் தளங்களிலும் வெளியிட்டு காலத்தையும், நேரத்தையும் வீணாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

செய்மதிகள் உண்மையை எடுத்துக்காட்டுவதால்தான் தமிழ் மக்களின் துயரைத் துடைப்பதற்கு வெளிநாடுகள் வன்னிக்கு வந்துகொண்டிருக்கின்றன. முல்லைத்தீவுக்கு அனான் போகவில்லை. ஐ.நா போகிறது என்று ஒரு ஆங்கில வார ஏடு தலைப்புச்செய்தி வெளியிட்டிருக்கிறது போதாதா?

## பகுதி XVIII

சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... கடலே நீ எம் நிலை உணராயோ..



நீக்கும் நோக்கத்துடன் மெது வாக வரும்போது "ஹாய்" எனக் கையசைத்தார். நிறுத்தும் யோசனை யுடன் வந்த பியசேன "ஹாய் என்றவாறே மீண்டும் ஜீப்பின் வேகத் தைக் கூட்டியபடி, அங்கிருந்து அகன்றுசென்றார். அன்று அந்த முஸ் லீம் வர்த்தகரின் சமயோசிதமான நட வடிக்கைதான் அந்தப் போராளி' யைக் காப்பாற்றியது.

அந்த ஒல்லிக்குளத்தில் மீண் டும் முஸ்லீம் மக்கள் குடியேறியுள் ளனர். பதற்றம் நிலவிய நாட்களில் அவர்கள் இங்கிருந்து இடம் பெயர்ந் திருந்தனர். சவுதிஅரேபிய அரசின் நன் கொடையாகக் கிடைக்கப்பெற்ற கூடாரங்களில் இந்த மக்கள் குடியி ருந்தனர். மேலே யு.என்.எச்.சி.ஆரின கூடாரங்கள் போடப்பட்டிருந்தன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பி னர் இந்த சுனாமி அனர்த்தத்தில் மேலும் கூடியளவு சிரத்தை எடுத திருக்கலாம் என்ற கருத்து, பரவலாக மக்களிடையே காணப்பட்டது. தின மும் அம்பாந்தோட்டை, காலி, மாத் தறையில் புனரமைப்புப் பணிகள் இடம் பெறுவதையும், அங்குள்ளோ ருக்கு வெளிநாட்டு உதவிகள்குவி வதையும் தொலைக்காட்சியில் காணும் மக்கள், கூட்டமைப்பினர இன்னுங் கூடிய அக்கறை எடுத் திருந்தால் தமது அவலம் ஓரளவு நீங்கியிருக் கும் என்று தெரிவித்திருந்தனர்.

ஆனால் நான் அறிந்தவரையில் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர நேரு பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருந்துவிநியோகம் தொடர்பாக அம்பாறைக்குச் சென்றிருந்தார். அங்கு அம்பாறைமாவட்ட வைத்திய அதிகாரியுடன் இவருக்கு மோதல் ஏற்பட்டது. அந்த வைத்திய அதி காரி இனத்துவே சத்துக்குப் பெயர் போனவர். சச்சரவு பெரிதாகி "இது எனது வைத்தியசாலை வெளியே போ" எனக் குறிப்பிட, "சந்திர நேரு இது உனது, வைத்தியசாலை யல்ல பொதுமக்களின் வைத்தி யசாலை" எனக் குறிப்பிட ஒரே கலாட்டா. இறுதியில் சந்திர நேரு வைக்கைது செய்யாவிடில் போரா ட்டம் நடததுவோம் எனத் தாதி மாரும், சிற்றூழியர்களும் போர்க் கொடி உயர்த்தினர். இறுதியில் பெயருக்கு அவர்மேல் வழக கொன் றைப் பதிவு செய்து அவரை அனுப்பி வைத்தனர் அம்பாறை பொலிஸார். சந்திரநேரு மனித உரிமைகள் நிறு வனத்தின் ஒரு பிரதிநிதி. அவருக்கு நீண்ட ஒரு அரசியற் பாரம்பரியம் உண்டு. அவரது தந்தை' தான் அறப்போர் சூரர் "அரியநாயகம்."

மட்டக்களப்பில் கல்லாறு - கோட்டைக்கல்லாறு பகுதிகளுக்கு தனது ஊரான அம்பிளாந் துறையிலிருந்து உழவு இயந்திரங்களு டன் பொதுமக்களையும் கொண்டு சென்று சிரமதானப் பணிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் அரிய நேத்திரன் ஈடுபட்டார்.

இதேபோல கல்குடா பகுதியில் பல்வேறு பணிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்த மூர்த்தி ஈடுபட்டார். இதேவேளை பெரும் பாலும் கொழும்பில் நின்று ஆற்ற வேண்டிய பணிகள் - குறிப்பாக தூதுவராலயங்கள் போன்றவற் றுடனான தொடர்புகள் போன்ற வற்றை சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேற்கொண்டார். ஆனாலும் மட்டக் களப்புக்கு இடையிடையே வந்து அவர் தனது பணிகளை மேற் கொள்ளத் தவறவில்லை. வலுப் படுத்தும் வகையில் செயற்பட்டவர் ஜோசப அண்ணர். அவர் மீது தமிழ் மக்க ளுக்கு பெரும் மதிப்பு உண்டு.

இவரை இந்தச் சுனாமி அனர் த்தம் அதன்பின்னரான நிவார ணப் பணிகள் - அதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகச் செவ்வி கண்டேன்.

'1978ஆம் ஆண்டு கடந்த சூறாவளியின்போதுதான் முதன் முதல் மட்டக்களப்பில் பெரிய அனா த்தம் நிகழ்ந்தது. ஏறத்தாழ 1100பேர் மரணமானார்கள். இதில் மின்சார மற்றும் தொலைத்தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டு, கம்பங்கள் தொடக்கம் எலலாம் அழிந்து போயின. தென்னைச் செய்கை தொண்ணூற்று ஆறு சதவீதம் அழிந்து போனது. நாற்பதினாயிரம் வீடுகள் முற்றாக அழிந்துபோயின. அந்தநேரத்தில் இருந்த ஐ.தே.க. அரசாங்கத்தில் ஜே.ஆர். ஜெய வர்த்தன, பிரேமதாஸ போன் றோர் மட்டக்களப்புக்கு வந்து, நாங் கள் முழுமையாக மட்டக்களப் பைக் கட்டியெழுப்புவோம் என வாக்குறுதி கொடுத்தனர்.

ஆனால் அழிந்து போன நாற் பதினாயிரம் வீடுகளுக்குப்பதி லாக எண்ணாயிரம் வீடுகளே அமைக் கப்பட்டன. இதைவிட அதைச் செய்வோம் - இதைச் செய்வோம் என கொடுத்த வாக்குறுதிகளில் முழுமையாக எதையும் செய்ய வில்லை. அரசாங்கங்களின் வாக் குறுதிகளின் நிலை இவ்வாறுதான்.

இது 1978இல் நடந்தது. இதன்பின் 1990ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை தமிழருக்கு நிகழ்ந்த அழிவுகள் - மனித உரிமை மீறல்கள் இராணுவத்தால் நிகழ்த் தப்பட்ட படுகொலைகளால மக் கள இடம்பெயர்ந்து, எத்த னையோ அவலங்களுக்கு உள்ளாக் கப்பட்டபோதும், அர சாங்கம் பல வாக்குறுதிகளை வழங்கியது. எனி னும் எதனையும் முழுமையாகச் செய்ததில்லை.

குறிப்பாக கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் நடை பெற்ற போது, ஒரு விசாரணைக் கமிஷன் வைத்து, ஐம்பத்திரண்டு லட்சம் ரூபா பணம் கொடுத்ததே யொழிய சத்துருக்கொண்டான், மைலந் தனை, வந்தாறுமூலை பல் கலைக் கழகம் போன்றவற்றில் நடந்த கைது கள் மற்றும் படுகொலைகளுக்கு எந்தவிதமான நிவாரணம் எதுவுமே கிடைக்கவில்லை. இதே நிலைப்பாடு தான் இப்போதும் உள்ளது.

சுனாமிக்கு முன்னர் நடை பெற்ற வெள்ளப்பெருக்கின் போது நாற் பதினாயிரம் பேர் இடம்பெயர்ந்து, கிட்டத்தட்ட அறுபது முகாம்களில் இருந்தனர். இந்தநிலையில்தான் சுனாமி அனர்த்தம் நிகழ்ந்தது.

இன்றைக்குக்கூட அரசாங்கத் தால் மேற்கொள்ளப்படவேண் டிய நிவாரணங்கள் முழுமையாக மட்டக் களப்பை வந்தடையவில்லை. அழி வுகள் - இடர்பாடுகளை அகற்ற இரண்டு, மூன்று பாரிய இயந்திரங் களையே அனுப்பியது. ஆனால் தனியார் நிறுவனங்கள் மற்றும் இ.தொ.கா.வினர் வந்தபோதுதான் இயந்திரங்களின் உதவி - ஓரளவு ஆறுமுகம் தொண்டமான்மூலம் கிடைத்தது.

ஆனால் இன்னமும் வாகரை பகுதிகளில் அழிவுகள் - இடர் பாடு களை அகற்ற எந்த நடவடிக்கை யும் மேற்கொள்ளப்படவில்லை. அதேநேரத்தில் தொலைக்காட்சி யைப் பார்க்கும்போது, எவவ ளவோ வேலைகள் முழுமையாக மேற்கொள்ளப்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. வீதிகளைச் சீர மைக்கிறார்கள், வீடுகள் கட்டத் தொடங்கியுள்ளனர். புகையிரதப் பாதைகளைச் சீரமைக்கிறார்கள். இதைக்காணும்போது, எமது மக்கள் எமது பகுதியில் எதுவும் நடக்கு தில்லையே எனக் கேள்வியெழுப் புகின்றனர். இந்தச் சூழலில்தான் எமக்கென ஒரு கட்டுமானம் இருக் கவேண்டு மென்ற நிலைப்பாட்டை வலியுறுத்தவேண்டியுள்ளது.

எமக்கென ஒரு இடைக்கால நிர் வாகமோ, கட்டுமானமோ இருநதால் தான், எமது பகுதியைக் கட்டி யெழுப் பக்கூடிய வாய்ப்பு வரும். எனவே தான் சர்வதேச நாடுகளி டம் இந்தச் சந்தர்ப்பத்திலாவது இடைக்கால நிர்வாக அதிகார சபையை வழங்கா விடினும் இதைக் கொண்டு செயற் படுத்தக்கூடிய ஒரு கட்டுமானத்தை வட-கிழக்குக்கு வழங்குங்கள் எனக் கோருகின்றோம்.

இதேவேளை வட-கிழக்கில் இருவிதமான நிர்வாக அலகு இருக் கின்றதென்பதை எவரும் மறுக்க முடியாது. அது உலக நாடுகளுக் கும் நன்கு தெரியும். ஒன்று விடு தலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி, மற்றையது அரச கட்டுப் பாட்டுப் பகுதி. இப்படியான சூழ் நிலையில் விடுதலைப்புலிகளின் இயந்திரத்தின் மூலமாகத்தான் ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தி,. இந்த வேலைத் திட்டங்களைச் செயற் படுத்த நடவடிக்கை மேற்கொள் ளப்படவேண்டும். அவ்வாறு மேற் கொண்டால்தான் சுனாமியால் பாதிக் கப்பட்ட பகுதிகளை, அழிந்து போயு ள்ள பகுதிகளைக் கட்டியெழுப்பக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.



(தொடரும்...)

# தைப்பூசத் திருநாள்

தைப்பூசத்திருநாள் – சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவ நடனத்தை வியாக் கிரமபாதர்,பதஞ்சலி முனிவர்களும், தில்லை வாழ் அந்தணர்களும், தேவர்களும் ஏனைய அடியார்களும் தரிசித்து ஆனந்தக் களிப்பில் மூழ்கிய அந்த நன்னாளைப் போற்றுவதாகவும், ஸ்ரீ நடராசப்பெருமான், அம்பாள், முருகப் பெருமான் ஆகியோரை வழிபாடு செய்வதற்கு மிகவும் ஏற்ற புனித நாளாகவும் சைவமக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

தைப்பூசம் முருகன் கோயில்களிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. விசேட பூசைகள், ஆராதனைகள் ஆயிரத்தெட்டுச் சங்குகளால் சங்காபிஷேக இலட்சார்ச்சனை, மஞ்சம் முதலியவற்றில் திருவுலா வருதல் ஆகியன கோயில்களில் இடம் பெறுகின்றன.

கிராமியத் தெய்வங்களுக்குப் பொங்கல், மடை விசேட பூசைகள் என் பனவும், நிகழ்த்தப்பட்டு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. நெல் அறுவடைக் காலமாகவும் இந்தப் பருவம் நிகழ்வதால், புதிதெடுத்தல் புதிதுண்ணல் என்னும் பாரம்பரிய வைபவங்களும் தைப்பூசத் தினத்தன்று விவசாயிகளால் மேற் கொள்ளப்படுகின்றன.

தைப்பூசத் திருநாளன்று குழந்தைகளுக்கு கர்ண வேதனம் என்னும் காதுகுத்தல், அன்னப் பிராசனம், வித்தியாரம்பம் என்பனவும் நடத்தப்படு கின்றன. தைப்பூசம் ஒரு நிறைந்தநாள், எல்லாக் குற்றங்களையும் நீக்கும் நாள், எடுத்த கருமங்கள் அனைத்தும் கைகூட வைக்கும் நாள் என்பதால், புதிய கருமங் களை ஆரம்பிப்பதற்குத் தைப்பூச நன்னாளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த நம்பிக்கை மிகப்பழைய காலந்தொட்டு மக்களிடையே இருந்து வருகிறது. நம்பிக்கைகள் உறுதியாக இருக் குமேயானால், அவை வீண் போவதில்லை.

திருஞான சம்பந்தர் காலத்தில் தைப் பூச உற்சவம் மிகுந்த சிறப்பைப் பெற்றி ருந்தமை அவரின் தேவாரப் பாடல் ஒன்றிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது.

'மைப்பூச மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூச நீற்றான் கபாலீச்சர மமர் ந்தான்
நெய்ப் பூச மொண் புழுக்கல் நேரி ழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்

என்பது சம்பந்தர்தேவாரம். திரு மயிலையில் இறந்த பூம்பாவை என்ற பெண்ணை உயிர்ப்பிக்க கபாலீச்சரத் தானை வேண்டிப் பாடிய திருப்பதிகத்தில் தைப்பூசம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. நேரிழையாள் கொண்டாடும் தைப்பூசம் என்பதிலிருந்து பெரும்பாலும் பெண்களே தைப்பூச உற்சவத்தைக் கொண் டாடினர்.

தைப்பூசத்திருநாள் இறைவனை வழிபாடு செய்வதற்குச் சிறந்தநாள். தில் லையிலே உள்ள சிதம்பரத்தில் எந்நாளும் ஸ்ரீ நடராசப் பெருமான் சிவகாம சுந்தரியம்மையாரோடும் புலப்படுத்தியருளுகின்ற ஆனந்தத் தாண்டவத் துக்கும், தைப்பூசத்துக்கும் தொடர்பு உள்ள மையை நூல்கள் காட்டுகின்றன. தைப்பூசத் திருநாளை இறைவன் தமது தாண்டவத்திரு நிருத்தத்தைப் பத்த கோடிகளுக்கு முதலில் தரிசிப்பித்து அருளுவதற்கு தெரிந்தெடுத்தமை தைப்பூசப் புண்ணிய நாளின் சிறப்பை உணர்த்துவதாக உள்ளது.

எம்.பி.அருளானந்தன்

# நூல் அகம்

சி.சந்தானகுமாரசர்மா

நூலின் பெயர் : சிவத்தமிழ்
நூல் ஆசிரியர் : மு.க.சு. சிவகுமாரன் (B.F.A)
நூலின் பெறுமதி : 150 ரூபா




சவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் எண்பதாவது பிறந்தநாளை முன்னிட்டு இந்தநூல் கடந்த 10-01-2005 அன்று துர்க்காதேவி ஆலய திருமணமண்டபத்தில் வெளயிடப்பட்டது.

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும், தற்போது ஜேர்மனி நாட்டில் வசித்துவருப வருமான கலாநிதி வெற்றிமணி மு.சு.சிவகுமார னால் அந்த நாட்டில் காலாண்டு இதழாக வெளி யிடப்படும் இந்த நூல் சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்த நாளையொட்டி இங்கு வெளியிட்டுவைக் கப்பட்டது. தொடர்ந்து இதன் வெளியீடுகள் லண்டன், ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்து, தமிழ் மக்களின் கலை, கலாசாரத் தைப் பேணும் நோக்குடனும், தாய்நாட்டில் உள்ள சமயப்பெரியாரை அங்குள்ள தமிழ்க் குழந்தைகளுக்கு தெரியப்படுத்தும் நோக்குடனும் வெளியிடப்படும் இந்தநூல் மிகவும் பெறுமதிவாய்ந்த சிறுசிறு கருத்துக களையும், கதைகளையும் கொண்டுள்ளது.

அன்புக்கு அடிமையான 'வேடன' என்ற கதை இராமாயணத்தை எழுதிய வாலமகி முனிவரை வியந்து கூறுகின்றது. 'அருள் ஓவியம்' என்னும் தலைப்பில் அமைந துள்ள கருத்துக்கள், கடுகு சிறிதாயினும் காரம் பெரிது என்பதுபோல மிகவும் ஆணித் தரமாக அமைந்துள்ளது.

தெய்வத்தின் நிழல், உலக வரலாறு காணும் இந்து ஆலய மறுமலர்ச்சி ஆகிய கட்டுரைகள் இந்துமதத்தின் ஆழத்தை எடுத்தியம்புகின்றன. யோகர் தாசனால் எழுதப்பட்ட சிவதரிசனம் என்ற யோகர் சுவாமிகள் பற்றிய கட்டுரை ஞானிகளின் ஞானக்கண் எவ்வளவு வலியுமையுடையது என்பதற் குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சொர்க்கவாசல் என்ற தலைப்பிலமைந்த கதை நரகமும் சொர்க்கமும் எங்கே என்பதை மிகத்துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது.

கண்ணனின் கண்ணீர், பழமொழிகளும் உண்மை விளக்கமும் என்பன இது வரை நாம் அறியாமலிருந்த பல உண்மைகளை எடுத்துக்கூறுகின்றன.

மேலும் ஈரநெஞ்சம், தக்கநேரத்தில் உதவிய தங்கமகள், தெய்வீகத் தாய், தங்கக்கவிதை, என்னை ஊக்குவித்த இணையற்ற தலைவி தவச்செல்வயார் தங்கம்மா அன்னை, தேவிபணிபுரியும் சிவத்தமிழ்ச்செலவி, பெண்ணியம் என்பது பேசப்படும் பொருள் அல்ல, அன்னை தங்கம்மா அப்பாக் குட்டி என்பன போன்ற கதைகளும், கவிதைகளும், சிவத்தமிழ் அம்மாவின் புகழ் திக்கெட்டும் ஒலிக்கின்றது என்பதற்குச் சான்று பகர்வனவாகும். இவை மட்டுமன்றி 'சின்ன மேளங்கள்' வேண்டாம்' என்னும் தலைப்பல் அமைந்த கவிதைத்துளி கோவில்களில் பிரசங்கத்திற்குப் பெயர் போன இவர் என்பதையும், டொக்டர், பொறியியலாளருக்குப் படிப்பதைவிட தங்கம மாவுக்குப் படிக்கப்போகிறேன் என சிறுமி கூறும் சொற்களிலிருந்து உயர்ந்த பண்பே எல்லாத் தொழில்களைவிடவும் மேலானது என்பதைக் காட்டுகிறது.

'அபிராமியானா' ஒரு ஜேர்மனியப் பெண் என்ற படத்துடன் விளக்கும் கதை இந்து சமயத்தின் தொன்மையையும், அற்புதத்தையும் கேள்விப்பட்ட மேலைத் தேயத் தவர்கூட எமது மதத்தில் இணைவதைப் பார்க்கும்போது மெய் சிலிர்க்கின்றது.

நூலன் பெயர் :– காலம் தந்தகை விளக்கு
நூல்ஆசிரியர் :– கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
விலை :– 150 ரூபா

இந்து சமயத்தின் வேர்களும், விழுது களுமாகத் திகழ்பவை திருமுறைகளா கும். ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் அவதரித்த திருஞானசம்பந்தர், சுந்தர மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகா ஆகிய நான்கு சமய குரவர்களாலும் திருவாய்மலர்ந் தருளப்பட்ட திருமுறைகள் -இருபத்தோ ராம் நூற்றாண் டில் வாழ்கின்ற மக்களுக்கு அவற்றின் பொருட் சுவை, சொற் சுவை அவற்றின் பயன் என்பன தெளி வாக்கப் படவேண்டியது அவசியம்.




இதனைக் கருத்திற் கொண்ட பேராசி ரியர் மனோன்மணி சண்முகதாஸ் காலத் தின் தேவைகருதி – காலம் தந்த கை விளக்கு என்னும் நூலை உருவாக்கி, அதனை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80ஆவது பிறந்த தினத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

விளங்கிக்கொள்ள முடியாத பல தேவார, திருவாசக பாடல்களுக்கு மிக இலகுவாக விளக்கம் கொடுத்துள்ளார். கல்விப் பொதுத்தராதர சாதாரணதர, உயர்தர வகுப்புகளில் இந்து சமயம், இந்து நாகரீகம் கற்கும் மாணவர்க ளுக்கு இந்த நூல் பெரிதும் பயன்படும்.

# பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளுடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்!

## ஜனாதிபதி அப்பாஸ் தெரிவிப்பு



(டெல் அவிவ்)

இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்துவது தொடர்பாக கிளர்ச்சிவாதிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தை மிகவும் நெருக்கமான கட்டத்தை அடைந்துள்ளதாகப் பலஸ்தீன ஜனாதிபதி மஃமூட் அப்பாஸ் தெரிவித்தார்.

பலஸ்தீன தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது –

பலஸ்தீன பகுதிகள் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்கள் மற்றும் வன்செயல்களை அது நிறுத்த வேண்டும்.

தற்போது நாம் வாழும் சூழலிலுள்ள நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்பதை சகலரும் பொறுப்புணர்வுடன் உணர்ந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் கிளர்ச்சிவாதிகளுக்கும் எமக்குமிடையேயான வேறுபாடுகள் குறைந்து, பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. எனவே, நாம் ஒரு உடன்படிக்கைக்கு வருவதில் மிக அண்மையாக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து ஜிகாத் மற்றும், ஹமாஸ் ஆகிய இரண்டு அமைப்புக்களும், இஸ்ரேல் மீதான தாக்குதலை ஒரு மாத காலத்துக்கு நிறுத்தியுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சாயுல் மொங்சா தெரிவித்ததை இரண்டு அமைப்புக்களும் முற்றாக மறுத்துள்ளன.

இது தொடர்பாக ஹமாஸ் அமைப்பின் பேச்சாளர் அபு சூரி தெரிவிக்கையில் –

தாக்குதல் நிறுத்தம் தொடர்பான திட்டத்தை நாம் ஆராயலாம் எனத் தெரிவித்துள்ளோமே தவிர தாக்குதலை நிறுத்தவில்லை. சமாதானத்தை விலை கொடுக்காமல் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனாலும் நாம் மௌனமாக இருப்பது இதனை ஏற்றுக்கொண்டதற்குச் சமமானதல்ல. நாம் தெளிவாகக் கூறுகின்றோம். சகலவித ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

## 84 வயது மாணவனுக்கு கல்வி கற்பதில் புதிய சிக்கல்

உலகிலேயே மிக வயதான பள்ளி மாணவர் கென்யாவில் இருக்கிறார். அவர் பெயர் கிமானி மருகே (வயது 84). கப்கெண்டுய்போ நகரில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் அவர் கடந்த ஆண்டு சேர்ந்தார்.

அவர் சிறுவனாக இருந்த போது மாடு மேய்க்க வேண்டி இருந்ததால் பாடசாலைக்குச் சென்று படிக்க முடியவில்லை. கல்விக் கட்டணத்தை கடந்த ஆண்டு அரசு ரத்துச் செய்ததும் அவர் பாடசாலையில் சேர்ந்து படிக்க ஆசைப்பட்டார். அதனால் பாடசாலையில் முதல் வகுப்பில் சேர்ந்தார். படிப்பில் முதலாவதாகத் தேறினார்.

தலைமை ஆசிரியை ஜேன் ஒபிஞ்சு கூறுகையில் – கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் அவருக்கு இருந்த ஆர்வம் என்னை ஈர்த்தது. அதனால் அவரைச் பாடசாலையில் சேர்த்துக் கொண்டேன் என்று கூறினார்.

ஆனால் தற்போது அவர் படிப்பைத் தொடர்வது கேள்விக்குறியாகி இருக்கிறது. வகுப்பில் மற்ற மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் இவர் கெடுத்து வருவதாக பெற்றோர்கள் புகார் கூறியுள்ளனர்.

அவர் அடுத்து என்ன செய்யப்போகிறார் என்பதைத்தான் குழந்தைகள் கவனித்துக் கொண்டே இருக்கின்றன என்றும் பெற்றோர் புகார் கூறுகிறார்கள்.

இதனால் அவர் பாடசாலையிலிருந்து நீக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

## ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் பத்துப் பேர் படுகாயமடைந்தனர்!

ஈராக் இடைக்கால பிரதமர் இயட் அலாவியின் கட்சி அலுவலகத்துக்கு வெளியே இடம்பெற்ற கார்க் குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் சுமார் பத்துப் பேர் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் இடம்பெற்றவேளை, பிரதமர் அலாவி அலுவலகத்தில் இருக்கவில்லையெனவும், ஆனாலும் பல கட்சி அங்கத்தவர்கள் காயமடைந்ததாகவும் பிரதமர் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஈராக்கில் தேர்தல் நடைபெறும் வேளை ஈராக்கிய மக்களில்



பெருமளவானோரை வாக்களிக்கச் செய்வதற்கு முயற்சிப்போம். இருந்தபோதிலும் அங்கு சில இடங்களில் தேர்தல் நடைபெறாமல் பிரச்சினைக்குரிய பகுதிகளாகவுள்ளதென்பதனையும், ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென ஈராக்கிற்கான அமெரிக்கத் தூதுவர் ஜோன் நிக்ரோபொன்ட் தெரிவித்தார்.

தேர்தல் வாக்களிப்பு நடைபெறும்போது வாக்காளர்களுக்கான பாதுகாப்பு, ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் ஈராக் எல்லைப் பகுதிகளை மூன்று நாட்களுக்கு மூடுதல் போன்ற பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஈராக்கிய இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக்கில் தேர்தல் நடத்தப்படும் தினத்தன்று தம்மால் தாக்குதல் நடத்தப்படுமென அபு - முசாப் அல் சர்காவி எச்சரித்துள்ளார். அத்துடன் சுனி முஸ்லிம்கள் அனைவரும் தேர்தலுக்கெதிராகப் போராடவேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## ஈராக் யுத்த களத்தில் அமெரிக்க ரோபோக்கள்




ஈராக்கில் கிளர்ச்சிவாதிகளுக்கெதிரான தாக்குதல் நடவடிக்கைக்காக அமெரிக்கா ஆயுதங்கள் தரித்த ரோபோக்களை ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஒரு மீற்றர் உயரமுடைய கமராக்கள் பொருத்திய 18 ரோபோக்கள் விரைவில் ஈராக் செல்லவுள்ளன. இவை அனைத்தும் ரிமோட் மூலமே இயக்கப்படவுள்ளன.

இந்த ரோபோக்கள் ஏற்கனவே குண்டு செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ரோபோக்கள் எதிரி தொடர்பான சகல தகவல்களையும் அறிந்து தாக்குதல் நடத்தக் கூடியவை எனவும், இதனால் அமெரிக்கப் படையினருக்கான சேதவிபரங்கள் குறையுமெனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ரோபோ தன்மீது பொருத்தப்பட்டுள்ள கமரா மூலம் எதிரியின் தகவல்களைப் படம்பிடித்த பின்னர், அதனை இயக்குபவர் எதிரியின் நிலை மீது தாக்குதல் நடத்துமாறு கட்டளையிடும்போது - ரோபோ உடனடியாகவே தாக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது.



## சோமாலிய பிரதம பொலிஸ் அதிகாரி ஆயுத பாணிகளால் சுட்டுக்கொலை!

சோமாலிய தலைநகர் மொகாடிசுவில் வைத்து அந்நாட்டு பிரதம பொலிஸ் அதிகாரி இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஜெனரல் யூசுப் அகமட் சாஹின்லி என்ற பொலிஸ் அதிகாரியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கான காரணம் உடனடியாகத் தெரியவராத போதிலும், சோமாலியாவில் வெளிநாட்டு அமைதிப் படையினரை நிலைநிறுத்தியமைக்கு இவர் பின்னணியிலிருந்து செயற்பட்டமை ஒரு காரணமாக இருக்கலாமெனச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

நான்கு ஆயுதபாணிகள் – பிஸ்ரல் மற்றும் ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளுடன், ஞாயிறு மாலை பொலிஸ் அதிகாரியின் வீட்டிற்கு வந்து அவர்மீது மார்பிலும், தலையிலும் ஏழுமுறை




சுட்டுவிட்டு பிக் அப் வாகனத்தில் தப்பிச் சென்றதாக பொலிஸ் அதிகாரியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

சோமாலியாவில் 1991 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கம் என்ற ஒன்று செயற்படாமல் உள்ளது. அண்மையில் சோமாலிய ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பும் கென்யாவிலேயே இடம்பெற்றன. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி கென்யாவிலேயே தங்கியுள்ளார். அடுத்த மாதம் முதலாம் திகதி இவரது தலைமையில் சோமாலியா தலைநகரில் அரசாங்கமொன்று அமைக்கப்படவுள்ள நிலையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு 3 000 விமானங்களின் பறப்பு ரத்து



அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்புயலை அடுத்து அந்த நாட்டில் 3 000 விமானங்களின் பறப்புக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கடும் பனிப்புயலால் சிக்காக்கோவிலுள்ள ஓ ஹெயார் விமான நிலையத்தில் மட்டும் 400 விமான பறப்புக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. நியூயோர்க், பூஸ்ரன் மற்றும் பிலாடெல்பியா போன்ற விமான நிலையங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பனிப்புயலை அடுத்து அமெரிக்காவின் பல இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதெனவும், இந்தப் பனிப் புயல் மேலும் தீவிரமடையலாமென அமெரிக்க வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

அமெரிக்காவின் வட – கிழக்குப் பகுதிகளில் 21 அங்குல உயரத்துக்கு பனி பொழிந்து வருகிறது.

இதேவேளை, அமெரிக்க மாநிலமான மசாசோ செஸ்ஸில் கடும் பனிப்பொழிவையடுத்து அங்கு அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு 39 அங்குலத்துக்கு பனிப்பொழிவு இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.



அமெரிக்காவின் சில மாநிலங்களில் வெப்பநிலை பூச்சியத்திலிருந்து மைனஸ் 18 பாகை செல்சியஸிற்குக் (-18°C) குறைவடைந்துள்ளதாக அமெரிக்க வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இது 1892 ஆம் ஆண்டுக்குப் பின்னரான மிகக் குறைந்தளவு நிலையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 27 000 வீடுகளுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை 13 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வீரவேங்கை இறையவனின் வித்துடல் இன்று விதைப்பு

வீரவேங்கை இறையவனின் வித்துடல் விதைப்பும், வீரவணக்கக் கூட்டமும் இன்று பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சியில் இடம்பெறவுள்ளது.

கடந்த சனிக்கிழமை விசுவமடு வீதியில் வாகன விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது நேற்றுமுன்தினம் சாவடைந்த வீரவேங்கை இறையவன் (சந்திரவதனன் - கமலேஸ்வரன்) வித்துடல் அவரது சொந்த ஊரான ஞானசாரியார் வீதி, கரவெட்டியிலுள்ள அவரது இல்லத்திற்கு நேற்று எடுத்துவரப்பட்டது.

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் அவரது வீட்டிலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்படும் வித்துடல், துன்னாலை ரெலன்ற் தனியார் கல்வி நிறுவனத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்று மக்கள் அஞ்சலியின் பின் அணிவகுப்பு மரியாதையுடன் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். (12)

# பிரஷெல்ஸ் மாநாட்டின்போது நிதியுதவிகள் மறுபரிசீலனை!

பெல்ஜியம் தலைநகர் பிரஷெல்ஸில் இந்த வாரம் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் - இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மனிதாபிமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி உதவிகள் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றி ஆராயும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக அமெரிக்க இராஜாங்க பிரதி அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் இவ் வாரம் பெல்ஜியத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆர்மிரேஜ் இலங்கையின் புனர்நிர்மாண, மீள் அபிவிருத்தி தொடர்பாக ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொண்ட நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சு நடத்துவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொண்ட சர்வதேச அரசுகளும், சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு 450 கோடி டொலர்கள் உதவியாக வழங்கப்போவதாக உறுதியளித்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

# மன்னாரில் நில அதிர்வா? ஆய்வாளர்கள் ஆராய்வு!

(மன்னார்)

மன்னார் - முத்தரிப்புத் துறையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நில அதிர்வு இடம்பெற்றதாக கூறப்படுவது குறித்து ஆராய நிலவியல் ஆய்வாளர்கள் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்தனர்.

தீபாளி வீரக்கோன், பி.எச்.சி. ஆர்.சிறிவர்த்தன ஆகியோரே மன்னாருக்கு விஜயம்செய்து நில நடுக்கம் எற்பட்டதா என ஆராய்ந்தனர்.

இவர்கள் இந்தப் பிரதேசத்தில் சேதமடைந்த 10 இற்கு மேற்பட்ட வீடுகளைப் பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொண்டனர்.

நிலத்தின் கீழ் இருக்கின்ற மண்ணில் ஒரு அசைவு ஏற்பட்டிருக்கலாம் என்றும், அல்லது நீரோட்டம் ஒன்று ஏற்பட்டு இந்த வீடுகளில் வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றும் தாம் சந்தேகிப்பதாக தெரிவித்தனர்.

எனினும் இது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டு வருவதாகவும், இது தொடர்பாக அவதானமாக இருக்கவேண்டிய நிலை இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# அரசசார்பற்ற நிறுவனங்களால் தேசியபாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## தேசப்பற்று இயக்கம் குற்றச்சாட்டு

சுனாமியால் பாதிக்கப் பட்டவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதான போர்வையில் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படுத்தும் இராணுவத் தளபாடங்களை இறக்குமதி செய்வதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம்சாட்டியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உதவிப்பொருட்கள் என்ற பெயரில் ஹெலிகொப்ரர்கள் கொண்டுவரப்பட்டது தொடர்பாகவே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

சில அரச சார்பற்ற நிறுவனத்தின் நடவடிக்கைகள் நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிப்பதாகவும், அதுகுறித்து அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் மேலும் தேசப்பற்று இயக்கம் கேட்டுள்ளது.

**கடை வாடகைக்கு**

உரும்பிராய் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் அமைந்துள்ள புதிதாக அமைக்கப்பட்ட 3 கடைகள் வாடகைக்கு விடப்படும்

குறிப்பு:- அரச வர்த்தக நிறுவனங்களுக்கு உகந்தது.

*தொடர்புகளுக்கு:-*
**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**
N0 - 236, ஸ்ரான்லி வீதி , யாழ்ப்பாணம்.
T.P. 2225710 (சி-3766)

# மட்டக்களப்புமாவட்டத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் புலிகளுடன் சந்தித்துப்பேச்சு

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல் சம்மேளனப் பிரதிநிதிகள் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின கொக்கட்டிச்சோலையிலுள்ள அரசியல் செயலகத்தில் இடம்பெற்றது.

விடுதலைப்புலிகள் சார்பில் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், பொருண்மிய பொறுப்பாளர் சலீம், மட்டக்களப்பு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன், பட்டிருப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்குடா, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் தலைவர் அப்துல் ஜவான் தலைமையில் முஸ்லிம் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஒல்லிக்குளம் பகுதியில் முன்னர் குடியிருந்து 90 ஆம் ஆண்டுக் கலவரங்களின்போது இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் குடியேறியவர்கள் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு 14ஆண்டுகளின் பின்னர் தமது சொந்த இடங்களில் குடியேறுவது சம்மந்தமாக ஆராயப்பட்டது. இங்கு முன்னர் குடியிருந்தவர்கள் மீண்டும் வந்து குடியேறலாமென்று இந்தச் சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமது கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயல்களுக்கு வந்து பயிர்ச் செய்கை நடவடிக்கையில் அவர்கள் தாராளமாக ஈடுபடலாம் என்றும் விடுதலைப் புலிகள் முஸ்லிம் சம்மேளனப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்தனர்.

### விபத்து....

தார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரனை மேற்கொண்ட கொடிகாமப் பொலிஸார் விபத்துக்குள்ளான பஸ்சைத் தடுத்து வைத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

### அரச உயர்...

துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களின் அரச அதிபார்கள், பிரதேச செயலர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாகாண சபை அதிகாரிகள் என 120 பேர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் - மக்களுக்கான மறுவாழ்வு உதவிகள் தொடர்பாக செயற்படும் அமைப்புக்கள் குறித்து அதிகாரிகளுக்கு விரிவான முறையில் விளக்கமளித்தார்.

### அரச....

இவர்கள் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் - அது குறித்த தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை தமிழீழத் தேசியத் தலைவருடன் நோர்வே வெளியுறவு அமைச்சர் நடத்திய பேச்சுக்களை அடுத்து- அரசாங்கத்துடன் அது தொடர்பாகக் கலந்துரையாடிய விடயங்கள் குறித்து விதார் ஹெல்கிசன் நேற்றைய சந்திப்பில் புலிகள் தரப்புக்குத் தெரியப்படுத்தியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை பொதுக் கட்டமைப்பு ஒன்றிற்குள் கொண்டுவருவது குறித்து அரசாங்கத் தரப்பின் கருத்துக் குறித்து ஹெல்கிசன் புலிகளுக்கு எடுத்துக் கூறியதாகவும் - அந்த தகவல் தெரிவிக்கிறது.

### மூன்று...

மற்றும் ஒரு ஆண் மருத்துவரும் இராணுவத்தினரின் 9395 இலக்கமுடைய வாகனத்தில் வந்தவர்களால் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டதாக தனியார்துறை மருத்துவமனை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, மருத்துவ உதவி என்ற போர்வையில் ஆயுத உதவி வழங்க வந்துள்ளீர்களா? என இராணுவத் தரப்பால் வெளிநாட்டு மருத்துவர்கள் மூவரும் விசாரிக்கப்பட்டு, தர்க்கப்பட்டதையடுத்தே மேற்படி சம்பவம் இடம்பெற்றதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக இந்தச் செய்தி எழுதும்வரை பொலிஸ் தரப்புடனோ, இராணுவத் தரப்புடனோ தொடர்புகொண்டு தகவல் எதனையும் பெற முடியவில்லை.

வெளிநாட்டு மருத்துவர்களை படையினர் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் பலவந்தமாக அழைத்துச்செல்லப்பட்டமை குறித்து திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் கண்டன அறிக்கையொன்றை நேற்று மாலை வெளியிட்டுள்ளார். (10)

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிய கல்வியாண்டு மாணவர்கள் பதிவு செய்யும் திகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதிய கல்வியாண்டுக்கான மாணவர்களின் பதிவுத் திகதிகள், மற்றும் விரிவுரை ஆரம்பத்திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி விவசாயப்பீடத்தின் பதிவுகள் இன்று இடம்பெற்று விரிவுரைகள் பெப்ரவரி 7ம் திகதியும், விஞ்ஞானபீடப் பதிவுகள் நாளை இடம்பெறும்.

வர்த்தக முகாமைத்துவப் பீட மாணவர்களுக்கான பதிவுகள் இம்மாதம் 27 ஆம் திகதியும், பெப்ரவரி 14 ஆம் திகதியும் இடம்பெற இருக்கின்றன.

கலைப்பீட மாணவர்களுக்கான புதிய பதிவுகள் பெப்ரவரி 1 ஆம், 2 ஆம், 3 ஆம் திகதிகளிலும், விரிவுரைகள் பெப்ரவரி 14 ஆம் திகதியும் ஆரம்பமாக இருக்கின்றன.

சித்தமருத்துவபீடம், சட்டபீடம் ஆகியவற்றுக்குத் தெரிவான மாணவர்களுக்கான பதிவுகள் முறையே பெப்ரவரி 7 ஆம், 10 ஆம், திகதிகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

# கொரிய மருத்துவ குழு யாழ்ப்பாணம் வந்தது!

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென கொரிய மருத்துவக் குழு மற்றும் கொரிய பல்கலைக் கழக மாணவர்கள் அடங்கிய 40 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

இந்தக் குழுவினர் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென மருத்துவப் பொருட்கள், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை உடன் எடுத்துவந்தனர்.

பாதிக்கப்பட்ட வடமராட்சி பிரதேசத்துக்கு இன்று செல்லும் இந்தக் குழுவினர் சேதமடைந்த இடங்களைப் பார்வையிடுவதுடன், நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மருத்துவ சேவையை ஆரம்பிக்கவுள்ளனர்.

இவர்களுடன் கொரிய பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்து வந்த பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கவுள்ளனர்.

இவர்களுடன் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன், விரிவுரையாளர்கள், மாணவர்கள், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோரும் வடமராட்சிக்குச் சென்று உதவிகளை வழங்கவுள்ளனர்.

### அமெரிக்க தொண்டு...

அனுப்பவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களின் முன்னர் டுபாயிலுள்ள இறைஸஸ் நெற்வேக் எனும் நிறுவனம் புலிகளின் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக கடல் விமானங்கள் (சீ.பிளேன்) இரண்டை அனுப்பியதாகவும், அவை விமானப்படையால் பொறுப்பேற்கப்பட்டு நிவாரணப் பணிகளில் ஈடுபடுததப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விமானங்கள் இரண்டையும் விடுவிப்பது தொடர்பாக இறைஸஸ் நெற்வேக் நிறுவனத் தலைவர் கறிஸ்விக் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து விமானப் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியபோதும் அவை விடுவிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம், ஹெலிகள் சேவையில் ஈடுபடுத்த அவசியமில்லையென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (தே)

**மரண அறிவித்தல்**

**சோமசுந்தரம் அருள்பிரசாத் (சனா)**

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் அருள்பிரசாத் (சனா) நேற்று 24.01.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 11.00 மணியளவில் தகனக் கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நண்பர்கள் (உரும்பிராய்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.